# KAMBAR

18

## AN ESSAY

BY

CHELVAKESAVAROYA MUDALIYAR, M.A.

*Pachaiyappa's College*

MADRAS

DIOCESAN PRESS, VEPERY

1926

*Price, 12 Annas.*



கம்பநாடர்.

# KAMBAR

1185

# PREFACE

'THE chief glory', says Dr. Johnson, 'of every people arises from its authors'. The Tamils are a poetic people. Their poetical literature is a vast treasure of which any nation can well be proud. Greece gave birth to Homer and Socrates. The Tamil land gave birth to Tiruvalluvar and Kambar. Kambar is the Homer and Tiruvalluvar the Socrates of Southern India. The literary glory of the Tamils rests on Tiruvalluvar and Kambar, not to speak of Auvaiyar and a host of others. The object of this Essay is to present to the College student a brief survey of Kambar and his immortal Ramayan.

My thanks are due to Sriman C. Muttukrishna Nayadu Garu of Chengalvaraya Naicker's Orphanage Press, for his exertions in obtaining for me a photo of Kambar.

PERAMBUR,
*[illegible]th November, 1909.*

T. C.

# கம்பநாடர்

**தோ**ற்றுவாய். — கம்பநாடர் சரிதத்தை உள்ளபடி ஒழுங்காக வரையறுக்கத்தக்க ஆதரவுகள் மிகச் சிலவே. அவை தொண்டைமண்டல சதகம்—சோழமண்டல சதகம்—பாண்டிமண்டல சதகம்—தமிழ் நாவலர் சரிதை முதலியவற்றில் காணப்படும் சில பாக்களும், கன்னபரம்பரையாக வழங்கும் சில வரலாறுகளுமேயாம். பண்டைத் தமிழ்ப் பாவலர் சரிதங்களைக் கோத்தெழுதற்குரிய சாதனங்கள், இங்ஙனமான சில பாக்களும் சில கன்னபரம்பரை வரலாறுகளு மன்றி, வேறு எவை தாம் உள்ளன? 'பழங்காலைத் தூர்க்காதே, புதுக்காலை வெட்டாதே' என்று ஓலிடுகின்ற நாட்டிலே ஜீவசரிதம் என்பதொன்று உண்டோ? பலபேர்களுடைய வரலாறுகளும், ஒரே அச்சில் அடித்தெடுத்தாற்போல், ஒருபடித்தாகத்தானே இருக்கின்றன. எவரிடத்தேனும் சில குணங்குறிச் செயல்கள் சிறந்து தோன்றின், அவை கன்னபரம்பரையிலே பாரித்துத் தூலித்துப் போகின்றன. மாற்சரியத்தால் உலக்கை தேய்ந்து உளிப்பிடி ஆவதும் உண்டு. கர்னல் மக்கென்சி என்னும் இங்க்லிஷ்காரர் இரண்டிலக்ஷம் ரூபா வரையில் செலவிட்டுச்

சேகரித்த ஏட்டு ப்ரதிகளும், பாவலர் நாவலர்களை மூடி யிருக்கும் அந்தகாரத்தைப் போக்கினபாடில்லை. புராதன சிலாசாஸன ஆராய்ச்சி செய்கிற விற்பன்னர்களும், தமிழ்ப் புலவர்களுடைய ஜீவகால க்ரமத்தைத் தானும் இதுகாறும் வரையறவு செய்ததுமில்லை. ஆயினும், சென்ற நூற்றாண்டின் ஆதியில் மாணாக்கர்கள் இருந்த நிலைமையில் இப்பொழுது நாம் இருக்கவில்லை. அச்சியந்திரம் ஊன்றி வேர்கொண்டுவிட்டது. இருந்த இடமும் தெரியாமல் பெட்டி பேழைகளில் உக்கிமக்கிக் கிடந்த பழம்பனுவல்கள் ஒவ்வொன்றாய் அச்சியந்திரத்தின் மீது ஏறுதலுற்று மலிந்தனவாய்க் கடைத்தெருவிற்கு வருகின்றன. புராதன சரித்திரக் குறிப்புகளும் சிலாசாஸனங்களும் ஒவ்வொன்றாய் அச்சில் கிடைக்கின்றன. "கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்பான்" சிங்களத்தீவில் சிங்காதனம் ஏறிய காலத்தை மஹாவம்சம் என்னும் பௌத்த சரித்திரக் குறிப்பு வெளியிட்ட அளவில், கடைச்சங்கம் இருந்த காலம் கட்டுரைக்கக் கூடியதாயிற்று. சிலாசாஸனங்கள் குலோத்துங்கன் முதலான சில சோழராசாக்கள் காலத்தை வரையறுத்துவிட்டமையால், கம்பர் முதலான கவிகளுடைய காலம் இப்பொழுது ஒருவாறு விளங்கிவருகின்றது. அக்கால நூல்களாலும் உரைகளாலும், சங்கக் காலத்துக்கும் கம்பர் காலத்துக்கும் இடைப்பட்ட பல புலவர்களுடைய காலக்ரமமும் ஒருவாறு விளங்கிவருகின்றது.

ராதன புலவர்களில் சிலர் இன்னின்ன காலத்தவர் என இப்பொழுது தெளிவாகக் கண்ணெதிர்ப்படுகின் றனர். நம்முடைய மைந்தரும் அவருடைய மைந்தரும் அப்புலவர்களை இன்னும் நன்கு உணரக்கூடும். பசி யெடுத்தலான சில புலவர்கள் இப்பொழுது இந்தப் பழங் கணக்கையெல்லாம் பார்த்து வருகின்றமையால், அக்குத் தொக்கில்லாமல் அவாந்தரமானவருடைய கணக்கைக் கழித்துவிட்டாலும், பாக்கி சாக்கியான சில ஆசாமிகளின் நிலுவைக் கணக்கு ஏற்படாமல் போகாது. புலவர் சரிதங்களையும் அவர்கள் இயற்றிய நூல்களையும் பலமுகத்தான் ஆராய்வது நமக்கு இன் னும் நவமான காரியமாகவே இராநின்றது. நூல்களின் குற்ற நற்றங்களை ஆராய்வதற்கான கருவிகள் நமக்கு இன்னும் சால்கில. புராதன கவிகளைப் புதிய கட்ட ளைக் கருவிகளால் அளந்து பார்ப்பதும் தக்கதன்று. ஆகவே, கம்பநாடாது ஜீவசரித்திரத்தை விரிவாக ஆரா யப் புகுவதும், அவருடைய நூல்களின் தராதரங்களைப் பலபடத் தேடித் துருவிப் பார்ப்பதும், இந்த வியா சத்தின் நோக்கம் அல்ல. ஏனைக் கவிராயர்களில் இவர் எம்மாத்திரம், ஏனைக் காவியங்களில் இவருடைய இரா மாயணம் எம்மாத்திரம் என்பன துணிவதே இந்த வியா சத்தின் ஒருதலையான நோக்கம். இவருடைய புல மைத் திறத்தையும் குணங்குறிகளையும் இராமாயணத் தால் அறியக்கூடுமாயின், அவற்றை ஆராய்வதும், இந்த வியாசத்தின் ஒருபுடை நோக்கமாம்.

காவியத்தின் பூருவோத்தரம். — தமிழிலக்கியத்தின் இறந்தகால சரிதத்தை ஆராயப் புகுவோமாயின், ஆசிரியர் அகத்தியனார் காலத்துக்கு அப்பால் அடியெடுத்துவைக்க இயலாது. அக்காலம் தலைச்சங்கமிருந்து தமிழாராய்ச்சி செய்த காலமாகும். அக்காலத்தில் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்னும் தமிழ் மூன்றும் வழக்காறு உடையனவாக இருந்தன. அம்மூன்றையும் வகைப்படுத்தி அகத்தியர் தமது பெயரால் அகத்தியம் என்ற ஓரிலக்கணத்தை அருளிச்செய்தார். அவருடைய மாணாக்கர் பன்னிருவரில் முதன்மை பெற்றவரான தொல்காப்பிய முனிவர், அகத்தியத்தின் இயற்றமிழ்க் கூறுபாட்டினை ஆதாரவாகக் கொண்டு, தமது பெயரால் தொல்காப்பியம் என்னும் இலக்கணத்தை இயற்றினார். அகத்தியம் முதலாக ஏனைப் பழைய இலக்கணங்கள் எல்லாம் இறந்தனவாக, இன்றுகாறும் சிதைவுறாது எஞ்சிநிற்பது இஃதொன்றே. நன்னூல் சின்னூல் முதலிய பின்னூல்களைப் பெற்றெடுத்த இவ்விலக்கணம், எழுத்தையும் சொல்லையும் ஆராய்வதுடனே, பொருளிலக்கணத்தை நிரம்பவும் ஆராய்கின்றது. இப்பொருளிலக்கணம் ஒன்றுமே, (இடைச்சங்கத்திலும்) தலைச்சங்கத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் உள்ள கவிகள் தங்கள் பாட்டில் அமைத்த பழம்பொருளைத் திறந்துகாட்ட வல்ல திறவுகோலாய் இராநின்றது. அப்பொருளாவது அகப்பொருளென்றும் புறப்பொருளென்றும் இரண்டு பாகுபாடு உடை-

யது. அவற்றுள், அகப்பொருளாவது ஒத்த அன்பின ராகிய ஒரு தலைவனும் ஒரு தலைவியும் தமது உள் ளத்துணர்வினால் மாத்திரமே அனுபவித்தலான காம வின்பம். புறப்பொருளாவது எல்லாராலும் அனுப வித்து உணரப்படுவதான அறமும் பொருளுமாம். ஆகவே, அக்காலத்துத் தமிழ்ப் புலவர்கள் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையும் பாட்டில் அமைத்துப் பாடினர் என்பது போதரும். இடைச்சங் கத்து நூல்களிலும் கடைச்சங்கத்து நூல்களிலும் எஞ் சிநின்றவற்றை ஆராய்ந்துபார்க்குமிடத்தும், இது துணி யப்படுகின்றது. தமிழ்நாட்டின் கருப்பொருள் உரிப் பொருள்களை அமைத்து, அறம் பொருள் இன்பங்களை விளக்கி, அரசர்கள் வள்ளல்கள் முதலானாருடைய பேரும் புகழும் பெருவாழ்வும் விரித்துப் பாடிய நூல் கள் சொற்றொடர்நிலைச் செய்யுள் பொருட்டொடர் நிலைச் செய்யுள் என வரையறுக்கப்பட் டிருக்கின்றன. அம்மை முதலிய எட்டும் தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கண மென்பதும், அவற்றுள் "இழுமென் மொழி யான் விழுமியது நுவலினும், பரந்த மொழியான் அடி நிமிர்ந்தொழுகினும், தோலென மொழிப தொன்மொ ழிப் புலவர்" என்பதும் தொல்காப்பியம். இங்ஙன மான தொடர்நிலைச் செய்யுள்களில், ஒருபுடை பிற் காலக் காப்பியங்களோ டொத்து, மேற்கூறிய இலக்க ணங்கள் அமைந்து விளங்குவன, சிலப்பதிகாரமும் மணிமேகலையும். இது "ஐந்திணை மருங்கின் அறம்

பொருளின்பம், மக்க டேவர் எனவிரு சார்க்கும், ஒத்த மரபின் ஒழுக்கொடு புணர, எழுத்தொடு புணர்ந்த சொல் லகத்தெழு பொருளே, இழுக்கா யாப்பின் அகனும் புறனும்,...என்றிவை, தெரிவு வகையாற் செந்தமி ழியற்கையின்,...மணிமே கலேமேலுரைப்பொருள் முற் றிய சிலப்பதிகாரம்" என இறுதியில் இளங்கோவடி கள் எழுதியுள்ள கட்டுரையால் விளக்கமெய்தும். உத யணன்கதை, இடைச்சங்கத்துப் புலவராற் பாடப் பட்ட கலியும் குருகும் வெண்டாளியும் முதலிய செய் யுளிலக்கியம் ஆராய்ந்து செய்ததொன்ருக அடியார்க்கு நல்லார் கூறியுள்ளார். ஆகவே இதுவும் தொடர்நிலைச் செய்யுளின்பாற் படுவதாகும். இந்நூல் பைசாசபா ஷையில் குணுட்டியர் என்பவர் இயற்றிய பிருகத் கதையின் மொழிபெயர்ப்பு என்ப. பிருகத் கதையின் காலம் கி. பி. ஆருவது நூற்ருண்டென வடமொழி யிலக்கியச் சரித வாசிரியர்கள் துணிகின்றனர்.

காவியம் என்னும் பெயராவது காவிய லக்ஷணமா வது தொல்காப்பியத்தில் கூறப்பட்டதில்லை. காவ் யம் என்னும் வடமொழிப் பெயர், "நாடகக் காப்பிய நன்னூ னுனிப்போர்" என மணிமேகலே யுள்ளும், "கூத் திய ரிருக்கையும் சுற்றியதாகக், காப்பிய வாசனேக் கலந்தவை சொல்லி" என உதயணன்கதையுள்ளும், "கருதுவ தங்கொன் றுண்டோ காப்பியக் கவிகள் காம, வெரியெழ விகற்பித் திட்டார்" எனச் சிந்தாமணி யுள் ளும் வழங்கியதை அடியார்க்கு நல்லார் எடுத்துக்

காட்டுகின்றனர். வடமொழியில் தானும், காவ்யம் என்பது, தொல்லைநாளில் கவியொருவன் பாடினது யாது அதுவே காவ்யம் எனப் பொதுவகையால் வழங்கியதல்லது, யாதொரு வகைப்பட்ட நூலைச் சுட்டிவந்ததில்லை. வான்மீகி முனிவர் அருளிச்செய்த இராமாயணம் ஒன்றே சிறப்புவகையால் காவ்யம் என முதலில் வழங்கப்பெற்றது. அப்பால் அத்துறைப்பட்ட நூல்கள் வடமொழியில் காவ்யம் என வழங்கலாயின.

வடமொழியிலுள்ள காவ்யாதர்சம் என்னும் அலங்கார சாஸ்திரத்தைத் தமிழில் மொழிபெயர்த்த காலம் குலோத்துங்கச் சோழன் காலம். அம் மொழிபெயர்ப்பான தண்டியலங்காரத்தில்

பெருங்காப் பியநிலை பேசுங் காலை,
வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினொன்
றேற்புடைத் தாகி முன்வர வியன்று,
நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்,
தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்,
மலைகட னாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென் றினையன புனைந்து,
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழி னுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத் தாகி,
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியிற் றொடர்ந்து, சருக்கமி லம்பகம்
பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி,
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப,

எனக் காவியலக்ஷணம் உரைத்திருக்கின்றது. "நாற் பொருள் பயக்கு நடைநெறித் தாகித் தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்" என்பது, "விழுமியது நுவலி னும்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தாற் கொள்ள லானதே. சுவையும் பாவமும் மெய்ப்பாட்டியலிற் போந்தன. ஏனைய அங்கங்கள் தமிழில் பழமையான தொடர்நிலைச் செய்யுட்களில் நியதியாக வருவனவல்ல. தமிழில் தண்டியலங்காரம் ஏற்படுவதற்கு முன்னரே ஐம்பெருங் காப்பியங்களில் சிந்தாமணியும் ஐஞ்சிறு காப்பியங்களும் ஏற்பட்டுவிட்டன. இவைகளெல்லாம் பெரும்பான்மை வடமொழிக் காவியங்களின் போக்கைப் பின்பற்றினவை. இவற்றைப் பாடிய கவிகள் வடமொழிப் புலமை நிரம்பிய ஜைனப் புலவர்கள். தமிழில் பழைய தொடர்நிலைச் செய்யுள்கள் கதைப்போக்கிலே ஐந்திணைக் கருப்பொருள் உரிப்பொருள்களை உரைப்பதன்றி, "மலைகடல் நாடு வளநகர் பருவம்" முதலியவற்றைத் தனியாக வாங்கிக்கொண்டு உயர்வு நவிற்சியாகப் புனைந்துரைப்பதில்லை. இங்ஙனம் இவற்றைத் தனியாகப் புனைந்துரைப்பது வடமொழியில் வியாஸமுனிவர் முதலியோருடைய புராணங்களைப் பின்பற்றிய வழக்காகும். பிற்காலக் காவியங்கள், வடமொழியில் சதுஷ்பாதம் ('வடமொழிப் பாத நான்கும் வகுத்த வான்மீகி') என வழங்கும் பாவிற் கேற்பத் தமிழில் ஏற்பட்ட விருத்தப் பாக்களையே யாப்புறவாகக் கொள்ளலாயின.

இங்ஙனம் செய்யலுற்றவர்களில் மிக்க ஸித்தி பெற்றவர் திருத்தக்கதேவர் என்பவர். இவர் பாடிய காவியமே சீவகசிந்தாமணி. தமது காவியத்தில் ஜைனமத ஸித்தாந்தங்களை அங்கங்கே ஏற்றுவதையே இவர் ஒரு தலைக் கருத்தாகக் கொண்டவராயினும், வடமொழிக் காவியப் போக்கினைத் தமிழில் கொணர்ந்து கூட்டும் ஒருசார் கருத்தினையும் நன்கு நிறைவுறுத்தினர். ஐஞ் சிறு காப்பியங்களில் ஒன்முன சூளாமணி, சீவக சிந்தாமணியினும் முந்தினதாகக் கொள்ளப்படுகின்றது. கம்பருடைய விருத்தங்களின் ஓசைத்திறம் சூளாமணி விருத்தங்களின் ஓசைத்திறத்தை ஒத்திருப்பது உய்த்துணர்வார்க்குப் புலப்படும். கம்பர் சூளாமணியில் நன்கு பயின்றிருத்தல் கூடும். கம்பர், வடமொழிப் போக்கைப் பின்பற்றிய தமிழ்க் காப்பியங்களை ஓதி, அவற்றது கட்டுக்கோப்பின் மர்மங்களைச் செவ்விதின் உணர்ந்தவராகி, தமக்கு எடுத்துக்காட்டாக இருந்த காவியங்களினும் சிறந்த காவியம் பாடுவாராயினர். அது முதலாகப் பிற்காலத்துக் கவிகளுக்குக் கம்பராமாயணமே மேல்வரிச் சட்டம் ஆகிவிட்டது. சூளாமணி சிந்தாமணி முதலாக இற்றைநாட் காப்பியங்கள் இறுதியாக உள்ள எல்லாவற்றிற்கும் கம்ப ராமாயணம் சிரோமணியாக விளங்குவதாயிற்று. இச்சிறப்பினை உட்கொண்டே அக்காலத்தவர் கம்பநாடரைக் கவிச்சக்ரவர்த்தி எனக் கொண்டாடினர்.

அம்பிலே சிலையை நாட்டி அமரர்க்கன் றமுத மீந்த
தம்பிரா னென்னத் தானும் தமிழிலே தாலே நாட்டிக்
கம்பநா டுடைய வள்ளல் கவிச்சக்ர வர்த்தி பார்மேல்
நம்புபா மாலே யாலே நரருக்கின் றமுத மீந்தான்

என்று புகழ்ந்தார்கள்.

**எடுத்துக்கொண்ட விஷயம்.**—கவிச்சக்ரவர்த்தி ஆகின்ற இவர் யார்? இவர் எக்காலத்தவர்? இவர் காலத்திருந்த ஏனைப் புலவர் எவர்? இவர்க்கு ஓதலான நூல்கள் எவை? அவற்றில் எவற்றால் இவர் புலமை உருப்பெற்றது? இவரைச் சிறப்பெய்துவித்த இராமாயணத்தின் முக்கியாம்சங்கள் என்ன? இவர் இயற்றிய ஏனை நூல்கள் எவை? இவரைக் குறித்து இவர் இயற்றிய நூல்களால் ஏதேனும் அறியலாகுமா? முன்னே தோற்றுவாய் செய்தபடி, இந்த வியாசத்தில் விடுக்கப் புகுந்த விஷயங்கள் இவ்வினாக்களே யாகும். கைக்கெட்டலான சாதனங்களின் சார்பைக் கொண்டு, ஒருதலைச் சார்பாக ஒன்றும் கூறாமல், நடுவுநிலைமையாகவே இயன்றமட்டில் இவ்வினாக்களை இங்கு விடுக்க முயல்வோம்.

**ஆசிரியர் பெயர்.**—தமிழாசிரியர்களில் எவருடைய பெயர்தான் உள்ளபடி வழங்குகின்றது? புராதன கவீச்சுரருடைய பெயர்களெல்லாம் ஒட்டுப் பெயர்களாகவே வழங்கிவந்தன. அவர்கள் பிறந்து வளர்ந்த நாட்டினடியாகப் பிறந்த இடப்பெயராதல் ஒன்று; குணங்குறிச் செயற்கை விசேடத்தால் உண்டான காரண விடுகுறிப் பெயராதல் ஒன்று. இவ்வாசிரியர் கதியும் இதுவா

யிற்று. இவர், கம்பர் என்றும், கம்பநாடர் என்றும், கம்பநாட்டாழ்வான் என்றும், வழங்கப்பெற்றார்.

கம்பர் என்பது ஏகாம்பர முடையாரது பெயரின் மரூஉ என்பர் சிலர். காளிவரம் பெற்றுக் கவிபாடு முன்னே, அறிவிலாச் சிறியராய்க் கம்பம்போல் இருந் தவராதலின், ஏனைச் சிறார்கள் இவரைக் கம்பன் கம்பன் என்றழைத்துவந்த காரணத்தால் கம்பர் எனப்படுவா ராயினர் என்பர் வேறு சிலர். இவருக்கு இளமையில் கல்வி பயில்வித்த கணக்காயரது கம்பங்கொல்லையைக் காத்துவந்த காரணத்தால் கம்பர் எனப்பட்டார் என் பாரு முளர். காளிங்கராயன் குதிரையைச் சாவவும் வாழவும் பாடியதைக் கேட்டு, அரசன் இவரை வரு வித்த அளவில், இவரும் கம்பங்கொல்லையைக் காத் திருந்த கம்பத்துடனே சென்றாராக, இவரைக் கண்ட அரசன், 'இந்தக் கம்பனோ அது செய்தவன்?' எனக் கேட்டதனால் எழுதலான பெயர் என்றும் உரைப்பர்.

ஈடார் தருஞ்சோழ நாடதனு றுந்திருவ ழுந்தூரினில்
பீடாரு மோச்சக் குலத்தொருவ னவ்வூர்ப் பெருங்கோயில்வாய்
நாடா னுதிக்குந் தொறுஞ்சென்று சங்கூது நல்வேலையான்
கோடாம லதுசெய்து வருநாளு ளொருநாளிற் கூறுயிடை,

கம்பத்தி னருகோர் சிசுக்கண்டு பெருகுங் களிப்போடெடுத்
தம்பத்த னையும்வென்ற விழியுற்ற மனையாள்கை யதைநல்கினன்.
கொம்பொத்த வவண்மார்பி லமுதூறன் முதலாய குணமெய்தலால்
நம்பத்தி கண்டீச னருள்செல்வ மிதுவென்ன நனியெண்ணினர்.

கம்பத்தி னடியிற் கிடந்திட்ட தாற்கம்ப னென்னப்பெயர்
உம்பர்க்கு மெய்தாத பேறான பிள்ளைக் குவந்தோதினர்.

என்பர் புலவர் புராணம் உடையார்.

கம்பநாடு இவருடைய முன்னோர்களது ஜன்மதேச மாகையால், இவர் கம்பர் கம்பநாடர் என்று பெயர் பெற்றிருக்கலாம். இவர் இராமபக்தியிலும் ஆழ்வார் பக்தியிலும் ஆழ்ந்து ஈடுபட்டிருப்பதைக் கண்டு வியந்த ஸ்ரீரங்கத்து வித்துவாமிசர்கள் இவரைக் கம்பநாட் டாழ்வான் எனப் புகழ்ந்தனர். இவரைப் புகழ்ந்து பாடிய தனியன்களில் 'கம்பநா டுடைய வள்ளல்' என் றும் 'கம்பநாட் டாழ்வான் கவி' என்றும் வருவன இதற்குப் பொருந்தும்.

தஞ்சையில் இவர் திருவழுந்தூரில் பிறந்தவர் என் பதும் வாழ்ந்தவர் என்பதும், 'மன்றே புகழுந் திரு வழுந்தூர் வள்ளல்' எனச் சடகோப ரந்தாதியிலும், 'சீரணி சோழநாட்டுத் திருவழுந்தூரில் வாழ்வோன்' என இராமாயணத் தனியன் ஒன்றிலும் வருவனவற் றால் அறியப்படும். இப்பொழுதும் திருவழுந்தூரிலே கம்பர் மேடு என்று ஒரு மனை வழங்கிவருவதும் இதனை வலியுறுத்துகின்றது. கம்பர் வீட்டில் நாடோறும் புது மட்கலங்களில் அடிசில் அடுவது வழக்கம்: அட்டுக் கழித்த கலங்களை ஒரு கொல்லையில் எறிந்துவந்தனர்: இங்ஙனம் உடைதலுற்ற குயக்கலங்கள் நாளடைவில் மேடிட்டன. கம்பருடைய வாழ்க்கைக்கு அறிகுறி யான இந்த மேட்டை எவரும் கைக்கொள்ளாமல் விட்டனர் என அவ்வூரினர் கூறிவருகின்றனர்.

வம்ச மரபு.—இவர் ஓரரசனுடைய புதல்வர் என்றும் ஓச்சன் வீட்டில் வளர்ந்தவர் என்றும் சிலர் கூறுகின்றனர். திருவழுந்தூர்ப் பிடாரி கோயிற் பூசை செய்யும் ஓச்சனுடைய பிள்ளையே எனக் கூறுவார் சிலர். இவர் தன் மகன் அம்பிகாபதியை அரசன் கொன்ற காரணம் பற்றிப் பழிவாங்கத் தருணம் பார்த்திருந்தவர், வேட்டையாடும்போது ஒரு யானையால் துரத்திவரப்பட்ட அரசகுமாரனை, 'காட்டானை விட்டாலும் கவியானை விடாது' என்று ஈட்டியால் குத்திக் கொன்றனர் என்பதொரு கதையைக்கொண்டு, இவர் க்ஷத்ரிய ரல்லராயின் அங்ஙனம் செய்யத் துணியார் என யூகித்து, இவரை ராஜவம்சத்தில் பிறந்தவரே என்பர். இவர் உள்ளபடி க்ஷத்ரியராயின், யாதொரு நாட்டையாவது ஊரையாவது தமிழ்நாட்டு வேந்தரிடத்தில் பெற்றாயினும் வென்றுகொண்டாயினும் அரசியல் நடத்தியிருக்கலாம். இவருடைய புத்ர பௌத்ரர்களும் அங்ஙனம் செய்திலாமையால், 'மகனறிவு தந்தையறிவு' என்கிற ப்ரமாணத்தைக் கொண்டும் இவர் க்ஷத்ரியர் என்பது துணிதல் கூடவில்லை. வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியார் முதலாயினோரும் மூவேந்தரும் கம்பருடனே ஸமபந்தி போஜனம் செய்ததாகவும், கம்பருடைய மாணுக்கரான ஏகம்பவாண முதலியார் கம்பர் வீட்டிலே சிலநாள் இருந்து விருந்துண்டதாகவும் கன்னபரம்பரை உண்டு. மஹாகவியாதலால் இவர் திறத்தில் வேற்றுமை பாராட்டாமல் அவர்கள் அங்ஙனம் செய்ததாக

வும் கொள்ளக்கூடு மாகையால், இந்த போஜன ஸம்பந்தத்தினுல் மாத்திரமே அவரை வேளாளரென்று கொள்ள இடமில்லை. 'உழுங்குலத்திற் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தாரே' என வேளாளரைப் புகழ்ந்து பாடிய ஏரெழுபது என்னும் நூலைக் கூலிக்குப் பாடியிருக்கலாம். தமது அன்னதாதாவான சடையப்பரை இராமாயணத்தில் பலவிடத்தும் புகழ்ந்ததன்றி, திருவபிடேகப் படலத்தில் 'வெண்ணெயூர்ச் சடையன் றங்கள் மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி" எனப் பாடியிருப்பதும், சடகோபரந்தாதியில் இருபத்தாறுவது செய்யுளில், வேளாண்மரபினரான நம்மாழ்வாரைக் 'குருகூரெங்கள் குலக்கொழுந்தே' எனக் கூறியிருப்பதும், இவர் வேளாளரேயோ எனக் கொள்ளக் கிடக்கின்றன. 'சீரணி சோழநாட்டுத் திருவழுந்தூருவச்சன்' என்ற பாடமும், 'கைம்மணிச் சீரன்றிச் சீரறியாக் கம்பநாடன்' என வாணியன் தாதன் இவரைப் பாடிய வசைப்பாட்டும், கம்பரை ஓச்சன் என்பார்க்கு இயைந்த சான்று. சந்தத்தை நோக்கும்போது, 'திருவழுந்தூரு வச்சன்' என்ற பாடம் விசுவாமித்ர ஸ்ருஷ்டியாய்ச் செருகிவிடப்பட்ட தென்பது வெட்டவெளி. வள்ளுவர் வீட்டில் வளர்ந்ததனுல் திருக்குறளாசிரியர் வள்ளுவர் என வழங்கப்பெற்றமை போல், கம்பரும் ஓச்சன் வீட்டில் வளர்ந்து ஓச்சரென வழங்கப் பெற்றனரோ?

கன்னன் பிறப்பும்பி ளுளிற் றுலங்கிற்று; கம்பன்பிறப்
பின்னந் தெரிந்தார்க ளில்லையில்லை முக்காலு மிதுமெய்ம்மையே

என்றது புலவர் புராணம். 'அறிவார் யார் நல்லாள் பிறக்குங் குடி?'

**இளமையும் கல்விப்பயிற்சியும்.**—காளிங்கராயன் குதிரையால் இவர் காளிவரம் பெற்ற கதையைப் பலரும் கேட்டிருப்பார்கள். ஒரு பிரமராக்ஷஸனுடைய உபதேசத்தால் கம்பர் கவிபாடுந் தெய்வப்புலமை பெற்றன ரெனத் தொழூவூர் ஸ்ரீ வேலாயுத முதலியார் தமது ஏரெழுபது முகவுரையில் உரைத்திருக்கின்றனர். இத்தன்மைத்தான கதைகளால் பெறப்படும் உண்மையாவது, அவர் இளமையிற்றானே கவிபாடுந் திறம் உடையவர், அல்லது இயற்கையிற்றானே கவிபாடுந் திறம் உடையவர் என்பதேயாகும். இளமையில் சடையப்ப முதலியாருடைய வீட்டில் வளர்ந்தபடியால், அம்முதலியாருடைய மைந்தரோடு இவரும் ஒரு கணக்காயரிடத்தில் சிறிது கல்விப்பயிற்சி செய்யப்பெற்றவர் என்பதில் ஐயமின்று. இவர் வரகவி என்று கூறுவார் கூறுக. இவர் பல நூல்களையும் படித்தவர் என்பதற்கு இவருடைய இராமாயணமே சான்று பகரும். மற்றைப்படி இவர் இளமைப்பருவத்துச் செயல் யாதொன்றும் கன்னபரம்பரையாகத்தானும் வழங்கவில்லை.

**கம்பரும் அவர் காலத்துப் புலவரும்.**—இராமாயணத்தில் உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தர் பாடினதென்பது உலகப்ரஸித்தம்.

பூணிலாவுங் கம்பனலம் பொலியும் தமிழாற் புகழெழ்திக்
காணுமாறு காண்டமுறுங் கதையிற் பெரிய கதையென்னுந்
தாணிலாவுங் கழலபயன் சபையிற் பயிலுத் தரகாண்டம்
வாணிதாச னரங்கேற்ற வைத்தார் சோழ மண்டலமே.

வாணிதாசன் என்றது ஒட்டக்கூத்தரை. புகழேந்திப் புலவர் கூத்தர் காலத்தவர் என்பதற்கு

நூலார் கலைவல்ல செம்பியன் கேட்ப நொடித்துமிக்க
கோலா கலவொட்டக் கூத்தனை யன்றுதற் கோவியென்று
மேலார் கவிசொல்லி நெய்த்தானத் தேசென்று வென்றுகொண்ட
மாலார் களந்தைப் புகழேந்தி யுந்தொண்டை மண்டலமே

என்றாற்போன்ற சான்றுகள் உள்ளன.

பாடும் புலவர் புகழொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனென் றேயெனைச் சொல்லுவரே

என்ற தனிப்பாடலால் குலோத்துங்கச் சோழன் ஒட்டருடைய மாணுக்கன் என்பது தெளியப்படும். 'ஒட்டா ஒரு மதி கெட்டாய்'; 'கூழுக்குப் பாடிக் குடியைக் கெடுத்தாள்' என்றாற்போன்ற ஐதிகங்கள், ஔவையாரும் இவர்களுடன் ஏககாலத்தவர் என்பதற்கு ஆதாரமாகின்றன. ஆகவே, கம்பர் ஒட்டக் கூத்தர் புகழேந்திப்புலவர் ஔவையார் என்னும் நால்வரும் குலோத்துங்கச் சோழன் காலத்தவர் என்பது தேற்றம்.

ஔவையார் கம்பர் காலத்தவர் என்பதில் ஐயமும் திரிபும் எழுகின்றன. கபிலரகவல் உள்ளபடியே கபிலர் செய்ததாய் அதன் கூற்று உண்மையென்று கொண்டால், ஔவையார் திருவள்ளுவருடன் பிறந்தவர்

என்பதும், புறநானூறு முதலியவைகளில் ஒளவையார் பாடிய பாக்கள் பலவாய் இருத்தலால் அவரும் கடைச் சங்கக் காலத்தவர் என்பதும் துணியப்படும். திருஞான சம்பந்தர் ஏழாவது நூற்றுண்டுக்கு முற்பட்டவர், ஐந்தாவது நூற்றுண்டுக்குப் பிற்பட்டவர் என்பது உறுதிப் பட்ட விஷயம்; 'தேவர் குறளும் திருநான் மறைமுடிவும், மூவர் தமிழும்...ஒருவாசகமென்றுணர்' என்ற நல்வழி வெண்பாவில் 'மூவர் தமிழும்' என்றது மூவர் தேவாரம்; ஆகவே ஸுந்தரமூர்த்தி நாயனுருக்குப் பின்னரும் ஒளவையார் இருந்தனர் என்று கொள்ளல்வேண்டும். பின்னும் குலோத்துங்கச் சோழன் காலத்திலும் இருந்தாரெனின், ஒளவையார் ஆயிரவருஷகாலம் வசித்திருந்தவர் என நம்புதல் வேண்டும். இதனுல், சங்கக் காலத்து ஒளவை வேறு, கம்பர் காலத்து ஒளவை வேறு என்கிற கோட்பாடு, சிலகாலமாக வேரூன்றி வருகின்றது.

> அந்தவௌவை யிந்தவௌவை ஆமிருவ ரென்றதை
> மைந்தரனே வருங்கால மதிப்பறியா மனத்தினரே

என்ற புலவர் புராணம்

> முன்னௌவை கலிவருட மூன்றுவ தாயிரத்தாள்.
> பின்னௌவை நாலாவ தாயிரத்திற் பிறந்திட்டாள்

என்றும்,

> விக்கிரமார்க் கன்புவியில் மேவுமுன்ன ளொருத்தியுற்றாள்.
> உக்கிரனுஞ் சாலியவான் உற்றவெண்ணூற் றேழாண்டில்
> மிக்கிகலுங் கம்பனிடம் வேதனைப்பட் டாளொருத்தி

என்றும் உரைக்கின்றது. 'குதிரையுங் காதம் கிழவியுங் காதம் குலமன்னனே' என்று சேரமான்பெருமானைப் பார்த்து ஔவையார் கூறியது உண்மையானால், மூவர் ஔவையார் இருந்ததாக நம்புதல் வேண்டும். இது நிற்க.

ஒட்டக்கூத்தர், அரசனுக்கு ஆசானாகிய கௌரவம் படைத்திருந்தமையாலும், கூத்தன் கவிச்சக்ரவர்த்தி எனக் கொண்டாடப்பட் டிருந்தமையாலும், எவரையும் தம்மிற் றாழ்ந்தவராகப் பெருமிதங்கொண்டு ஏனையரு டைய கவிதா ஸாமர்த்யத்தைப் பொருட்டு செய்யாமல் இறுமாப்படைந்திருந்தார். அதனால் மற்றவர் இவரை மட்டந்தட்டுவதில் நோக்கம் உள்ளவராக இருந்தனர். இங்ஙனம் கூத்தர் கர்வபங்கம் அடைந்த பல வரலாறு கள் இதற்குச் சான்று பகர்கின்றன. கவிதா ஸாமர்த் யத்தில் கம்பருக்கும் புகழேந்திப் புலவருக்கும் தாம் தாழ்ந்தவர் என உள்ளத்தினூடே நன்கறிந்தமையின், ஒட்டக்கூத்தர் மாற்சரியத்தால் பட்டினியாய்ப் படுத் துக்கொண்ட ஒருநாளிரவில், பாலும் பழமுமாகிலும் உண்ணும்படி வேண்டிய மனைவியாரிடத்தில், நளவெண் பாவைப் பிழிந்த சாற்றைத் தானும் விரும்புவதில்லை எனக் கூறினாரென்றும், கம்பர் இறந்த செய்தியைக் கேட்டவுடனே

> இன்றைக்கோ கம்பன் இறந்தநாள் இப்புவியில்
> இன்றைக்கோ என்கவிதை ஏற்குநாள்—இன்றைக்கோ
> பூமடந்தை வாழப் பொறைமடந்தை வீற்றிருக்க
> நாமடந்தை நூலிழந்த நாள்

எனப் பாடி ஒருபால் மகிழ்ந்து ஒருபால் புலம்பின ரென்றும் கூறுகின்றனர்.

ஔவையார் மிக்க அனுபவஸித்தி எய்தியிருந்தவர்: மிகச் சிறந்த ஆசுகவி: உலகியலுக்கு அமைந்த நீதிகளைப் பாடிவந்தவர்: அதனால் புவிராயர் கவிராயர் முதலான எல்லாராலும் பூசிக்கப்பட்டுவந்தார். புகழேந்தியானவர், இங்க்லிஷில் கௌபர் கோல்ட்ஸ்மித் என்பார்களைப்போல் செம்பாகமான கவி. கம்பர், கற்பனுசக்தியிலும் வருணனை யலங்காரங்களிலும் மில்டனுக்குக் குறைந்தவரல்லர்: யூரொப்பியர்களுடைய ஆதி கவியான ஹோமருக்கு எவ்விதத்திலும் இளைப்பவரல்லர்: ப்ரபஞ்ச விலாஸப் புலமையில் ஒருவாறு ஷேக்ஸ்பியரோ டொத்தவர். ஒட்டக்கூத்தரோ, ஸதே முதலானவர்களைப்போல் இரண்டாந்தரமான கவியென்று கொள்ளலாம். கூத்தரும் கேவலம் அல்பமான கவி அல்லராயினும், கம்பராகிய கதிரவன் முண் மின்மினியாகத் தோன்றினர்: புகழேந்தியான சந்திரன் முன்னே தாராகணங்களில் ஒன்றாகக் காணப்பட்டார். இவர்கள் மூவரும் ஒவ்வொரு துறைப் பாடலில் மிகக் கைபோனவர்கள். வெண்பாவில் புகழேந்தியும், விருத்தப்பாவில் கம்பரும், கோவை உலா அந்தாதி பாடுவதில் ஒட்டக்கூத்தரும், இணையற்றவர்.

கம்பர் காலம்.—ஒட்டக்கூத்தருடைய மாணாக்கனை குலோத்துங்கன், குமார குலோத்துங்கன் என்றும்,

II குலோத்துங்கன் என்றும் வழங்கப் பெறுவான். இவன் தந்தை, விக்ரம சோழன். விக்ரமன் தந்தை, I குலோத்துங்கன். கங்கைகொண்ட சோழனுடைய மகள் வயிற்று மகனும் சளுக்கு (Chalukya) வேந்தனுகிய விண்டுவர்த்தனனுடைய மகனுமாகிய உபயகுலோத்தமனாய், சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணி புனைந்தவன் இந்த I குலோத்துங்கனே. குமார குலோத்துங்கனுடைய மகன் இராசராசன். இவர்கள் அரசாட்சி செய்த காலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| I குலோத்துங்கன் | கி.-பி. | 1070 | முதல் | 1118 | வரையில். |
| விக்கிரம சோழன் | ,, | 1118 | ,, | 1132 | ,, |
| குமார குலோத்துங்கன் | ,, | 1132 | ,, | 1162 | ,, |
| இராசராசன் | ,, | 1162 | ,, | 1200 | ,, |

என்பது சிலாசாஸன ஆராய்ச்சியில் கண்டறிந்தது. ஒட்டக்கூத்தர் இயற்றிய உலாக்கள் மூன்று:—விக்கிரம சோழனுலா, குலோத்துங்கச் சோழனுலா, இராசராச சோழனுலா. இவை, மூவருலா எனவும் பெறும். கூத்தர் அச்சோழர் மூவர் காலத்தும் உயிர்த்திருந்தவர் என்பது, இதனுற் போதரும்.

கம்பர் சோழனிடம் விரோதங்கொண்டு, ஆந்த்ரதேசத்தில் ஓரங்கல் நாட்டின் அரசன் ப்ரதாபருத்ரனை அடைந்து, சிலகாலம் அவனுடைய சன்மானம் பெற்றிருந்தனர். கம்பர் ப்ரதாபருத்ரனிடம் சென்று அவன் அடைப்பை கட்டிவரப் பாடியதாகத் தமிழ் நாவலர் சரிதையில் காட்டிய

அவனி முழுதுண்டும் அயிரா வதத்துன்
பவனி தொழுவார் படுத்தும்—புவனி
உருத்திரா உன்னுடைய ஓரங்கல் நாட்டில்
குருத்திரா வாழைக் குழாம்

என்ற வெண்பா இதற்குச் சான்று. சிலாசாஸனங்களின் படி, இந்த ப்ரதாபருத்ரன் கி.–பி. 1162–க்குச் சிறிது முன்னே தொடங்கி 1197-க்குப் பின்னே சிறிது காலம் வரையில் அரசாட்சி செய்தவன். ஆகவே அவன் இராசராசன் காலத்தில் இருந்தவன் என்பது தேற்றம்.

கம்பரை ஆதரித்தவர் சடையப்ப முதலியார். இவர் தந்தை சங்கர முதலியார். ஒட்டக்கூத்தர் இந்தச் சங்கரரிடத்தில் உதவித்தொழில் புரிந்திருந்த காலத்தில், காங்கேயன் என்னும் உபகாரி ஒருவன், கூத்தரைக் கல்வி பயில்வித்துக் கவிராக்ஷதன் கௌடப் புலவன் எனப் பெயர் சிறப்பித்து உயரச் செய்தனன் என்பது, கூத்தர் அந்நன்றி பாராட்டிக் காங்கேயன்மீது பாடிய நாலாயிரக் கோவையால் அறியலாகும் என்ப.

புதுவைச் சடையன் பொருந்துசங் கரனுக்
குதவித் தொழில்புரி ஒட்டக் கூத்தனைக்
கவிக்களி றுகைக்குங் கவிரா க்ஷதனெனப்
புவிக்குயர் கவுடப் புலவனு மாக்கி
வேறுமங் களநாள் வியந்து காங்கயன்மேல்
கூறுநா லாயிரக் கோவைகொண் டுயர்ந்தோன்.

இதனால் கூத்தரிற் கம்பர் இளையவர் என்பது பெறப் படும். ஆகவே கம்பர் குமார குலோத்துங்கன் காலத்தில் கவிப்புலமை எய்தியிருந்தார் என்பது யூகிக்க

லாம். விக்கிரம சோழனுலாவில், சோழனோடு புடை சூழச் சென்றவர்களில் சடையப்ப முதலியாராகிய "திரிகர்த்தன்" ஒருவராகச் சேர்த்துப் பாடியிருப்பது இதனை வற்புறுத்தும். ஆகவே கம்பர் 12—வது நூற்றாண்டின் பிற்பகுதியில் பெருஞ்சிறப் புற்றிருந்தமை தெரியப்படும்.

கம்பர் இராமாயணம் பாடி அரங்கேற்றிய காலத்தை இராமாயணத் தனியன் ஒன்று.

எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய விராம காதை பங்குனி யத்த நாளில்
சுண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே

எனப் பாடியிருக்கின்றது. சாலிவாகன சகாப்தம் 807, அதாவது கி.—பி. 885 என்று இதனைக் கொண்டால், கம்பர் காலம் ஆயிரம் வருஷத்துக்கு முற்பட்டது என்பது ஏற்படும். ஆனால் 'எண்ணிய சகாத்த முந்நூற் றேழின்மேல்' என்றும் ப்ரதிபேதம் உண்டு. 'எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேல்' என்பதை, 'கருதிய சகாத்தம் எண்ணப்பட்ட நூற்றேழின்மேல்' எனப் பொருள்படுத்தி, ஆயிரமாகிய பேரெண்ணை ஒழித்து உலக வழக்கு நெறியே தழுவிச் சிற்றெண்ணாலே கூறியதாம் எனக்கொண்டு, சகாப்தம் 1107, அதாவது கி.—பி. 1185, என இணக்கிக்கொள்வது உசிதமாகும் என்பர் ஸ்ரீ—ரா—ராகவ ஐயங்காரவர்கள். "எண்ணிய சகாத்த முந்நூற் (முன்னூற்) றேழின்மேல்" என்ற

பாடமும் இங்ஙனம் பொருள் கொள்ளுமிடத்தில் பொருந்திவிடும். ஆகவே கம்ப ராமாயணம் அரங்கேறிய காலம் இராசராசன் காலமாக உறுதிப்படும்.

பெரியவாச்சான்பிள்ளை என்பவர் 'மஞ்சுலாஞ்சோலை வண்டறைமாநீர் மங்கையார்' என்ற பெரிய திருமொழிப் பாசுரத்து வ்யாக்யாநத்தில், "வண்டறை என்கிறது சோலைக்கு விசேஷணமாகவுமாம்; மாநீர்க்கு விசேஷணமாகவுமாம். ஜலத்தினுடைய ரஸ்யதையாலே 'ஈக்கள் வண்டொடு மொய்ப்ப'தென்று ஆற்றுவரவுகளிலே சொல்லுவர்களாய்த்துத் தமிழர்" என்றுரைத்திருக்கின்றனர். இங்கே குறித்திருப்பது (கம்பராமாயணம்—பாலகாண்டம்—ஆற்றுப்படலம்—10—வது விருத்தம்) "ஈக்கள் வண்டொடு மொய்ப்ப வரம்பிகந்து" என்ற அடி. பெரியவாச்சான் பிள்ளையின் ஜனனகாலம், கலியுகம் 4329, அதாவது கி.—பி. 1228. இதனால் கம்பர் 13—வது நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்பது பெறப்படும்.

கம்பர்க்கு ஓதலான நூல்கள்.—கம்பர் 12—வது நூற்றாண்டில் இருந்தவர் என முன்னர்த் துணிந்தோமன்றோ. ஆகவே, அதுகாறும் வழங்கிவந்த நூல்களில் பற்பல இவர் கைக்கு எட்டியிருத்தல் கூடும். ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம், சங்கநூல்கள், சைவத் திருமுறைகள், நாலாயிர ப்ரபந்தம், தொல்காப்பியம், தொல்காப்பியத்தின் உரைகள், இறையனு ரகப்

பொருளுரை, யாப்பருங்கலம், காரிகை ஆகிய இலக்கிய விலக்கணங்கள் இவர் ஓதியிருக்கக்கூடிய நூல்களாம். இவர் காலத்தில் நாலாயிர ப்ரபந்த வ்யாக்யாநங்களும் சைவ ஸித்தாந்த சாஸ்திரங்களும் பெரும்பான்மையாய் ஏற்படவில்லை.

சிலப்பதிகாரத்தில் 'ஆராளுருற்ற வீரபத்தினி' என்னும் பதிகவடியை விளக்குமிடத்தில், "ஆராளுர்-பெரிய வருத்தம்; ஆவது கணவனை யிழத்தல். 'மக்களிழந்த விடும்பையினு மனையாளிழந்த விடும்பையினு, மிக்க விடும்பை யோவாத விதவையிடும்பை யெனவினவித், தக்கவதனு லென்கழுத்திற் றுலிநீதந் தருளென்று, தொக்கமணிநீண் முடியானைத் தொழுதுபின்னு மிவை சொல்லும்' என்றார் பிறரும்" என உரைத்தார் அடியார்க்கு நல்லார். இங்கே காட்டிய விருத்தம் ஒட்டக் கூத்தரது இராமாயண உத்தரகாண்டத்தில் கண்டதாகையால், கம்பர் காலத்துக்கு, அடியார்க்கு நல்லார் பிற்பட்டவர் என்பதும், ஆகவே அடியார்க்கு நல்லாருரை கம்பர் காலத்த தன்று என்பதும் போதரும்.

'நெஞ்சுக் கிருள்கடி தீபம்.........தமிழ் நன்னூற்றுறைகள் அஞ்சுக் கிலக்கியம்.........பரகாலன் பனுவல்களே' என்ற பெரிய திருமொழித் தனியனுக்கு உரைத்த வ்யாக்யாநத்தில், 'தமிழுக்கு எழுத்து முதலான அஞ்சு லக்ஷணத்தையும் அறுதியிடுவதான நன்னூல் என்று ஒரு சாஸ்த்ரமுண்டு; அதனைச் சொல்லிற்றுதல்' என வரு

கின்றது. இந்த வ்யாக்யாநம் உரைத்தவர் பிள்ளைலோகம் ஜீயர். அவர் காலம் கலி 4367, அதாவது கி.-பி. 1266. வ்யாக்யாநத்தில் எடுத்துக் காட்டலான பெருமை வாய்ந்திருந்ததனுல், நன்னூல் ஏற்பட்டுச் சிலகாலம் ஆகியிருக்கவேண்டும். ஆகவே, கம்பர் காலத்தில் நன்னூல் வழங்கியது எனக்கொள்ளலாம். நச்சினார்க்கினியருடைய தொல்காப்பிய வுரையில் சில விசேஷங்களை நன்னூலார் சூத்திரமாக்கிச் சேர்த்திருப்பது ப்ரஸித்தம். ஆகவே நச்சினார்க்கினியர் உரையையும் அவருக்கு முற்பட்ட சேனுவரையர் உரையையும் கம்பர் பார்த்திருக்கலாம்.

கம்பர் அதத்தில் ஓர் அகப்பை அள்ளிக்கொண்டது.— 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்பது தமிழில் ஒரு மூதுரையாக வழங்கிவருகின்றது. தாங்கள் இயற்றும் நூல்களில் பெரும் புலவர்கள் தாங்கள் பயின்ற நூல்களின் சாரத்தையும் தங்கள் ஆசிரிய பரம்பரையின் கோட்பாடுகளையும் தங்கள் காலப்போக்கின் இயல்பையும் தழுவியிருப்பது ஸஹஜம். சங்க நூல்களிலும் சங்க மருவிய நூல்களிலும் திருக்குறளின் வாடை வீசுகின்றது. சிந்தாமணி முதலிய காவியங்களில் சங்க நூல்களின் வாடையும் சங்க மருவிய நூல்களின் வாடையும் அங்கங்கே வீசுகின்றன. பிற்கால இலக்கியங்களில் இவற்றின் வாடையோடு இராமாயணத்தின் வாடையும் வீசுகின்றது. ஷேக்ஸ்பியருடைய நாடகங்களில் ஒன்று

6043 வரிகளைக் கொண்டது; அதில் 1899 வரிகளே அவருடைய சொந்த சரக்காகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இராமாயணம் அரங்கேறி முடிகையில், அரங்கேறக் கேட்ட புலவர்கள், கம்பரை நோக்கி இராமாயணம் இங்ஙனம் ரஸிக்கின்ற மர்மம் யாதென உசாவிய விடத்து, கம்பர் 'வேறொன்று மில்லை. அததில் ஓர் அகப்பை அள்ளிக்கொண்டிருக்கிறேன்' என்றதாக ஒரு ஐதிகம் உண்டு. கம்பர்க்கு ஓதலானவை என மேலே காட்டிய நூல்களையும் கம்பராமாயணத்தையும் ஸாவதானமாக ஓதி ஒத்திட்டுப் பார்த்தால், கம்பர் அள்ளிக் கொண்ட அகப்பைக் குறிகள் தமிழ்ப் புலவர்க்குக் கட்புலனாகும். இந்த அகப்பைக் குறிகளைக் கண்டுபிடிப்பது, கல்விச்சுவை அறிந்தவர்க்கு இன்பமான பொழுது போக்காக இருக்கும். தமிழ் நூற்பயிற்சி குன்றி ஒருவாறு இங்க்லிஷ் பயின்று வயிறு வளர்ப்பதே பெரிதாக இருக்கின்ற இக்காலத்தில், இது செய்வது எம்போலியர்க்கு இலகுவான காரியம் அன்று. மேலோட்டாகத் திறந்து பார்த்தவளவில் கண்ணெதிர்ப்பட்ட சிலவற்றை அடியில் காட்டுகிறோம்.

சிந்தாமணியுடையார்

வெள்ளிவெண்
கோணி ரைத்தன போற்கொழுந் தாரைகள்
வானி ரைத்து மணந்து சொரிந்தவே

என்றார்.

புள்ளி மால்வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள்

என்றார் கம்பர். சிந்தாமணியில்

கண்ணெனக் குவளையைக் கட்ட லோர்பின்னர்
வண்ணவான் முகமென மரையி னுள்புகார்

என வருவதை

பண்கள்வாய் மிழற்று மின்சொற் கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகால் முகம்வா யொக்குங் களையலாற் களையி லாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர் களைகலா துலாவி நிற்பார்

எனக் கம்பர் சீர்செய்துகொண்டார்.

பட்டவர் தப்பலிற் பரவை யேந்தல்குல்
அட்டொளி யரத்தவாய்க் கணிகை யல்லது
மட்டுடை மணமகள் மலர்ந்த போதினுல்
கட்டுடைக் காவலிற் காமர் கன்னியே

என்ற சிந்தாமணிச் செய்யுளின் ஈற்றடியின் கருத்தே

அன்னமா மதிலுக் காழிமால் வரையை யலைகடல் சூழ்ந்தன வகழி
கன்னிய ரல்குற் றடமென யார்க்கும் படிவருங் காப்பின தாகி

என்ற இராமாயணச் செய்யுளின் கருத்து.

துன்பமுற் றவர்க்கலா
லின்பமில்லை யாதலின்

என்றது சிந்தாமணி.

துன்புள தெனினன்றோ சுகமுள ததுவன்றி

என்றது இராமாயணம்.

குட்டியைத் தின்னலாமே கோட்புலி புறத்ததாக

என்ற சிந்தாமணியும்

புலிதானே புறத்தாகக் குட்டிகோட் படாதென்ன
ஒலியாழி யுலகுரைக்கு முரை பொய்யோ

என்ற இராமாயணமும் ஒன்றே.

சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வ
பதவியர் தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கு முண்டா மாற்றலா மாற்றல் மாயா
உதவிகொன் றார்க்கென் றேனு மொழிக்கலா முபாய முண்டே

என்றது

ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே

என்ற புறப்பாட்டைத் தழுவியது.

வரம்பில தோற்றுமாக்கள்
இறக்குமா றிதுவென் பான்போல் முன்னோ ளிறந்தான் பின்னர்
பிறக்குமா றிதுவென் பான்போற் பிறந்தனன் பிறவா வெய்யோன்

என்னுமிடத்தில்,

தேய்த லுண்மையும் பெருக லுண்மையும்
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும்
அறியா தோரையு மறியக் காட்டித்
திங்கட் புத்தே டிரிதரு முலகம்

என்னும் புறம் நினைவில் வருகின்றது.

திருக்குறளில் நின்றும் கம்பர் பல அகப்பைகளை அங்கங்கே அள்ளி அமைத்திருக்கின்றனர்.

நல்லா றெனினுங் கொளறீது மேலுலகம்
இல்லெனினு மீதலே நன்று

என்பது 'வெள்ளியை யாதல்' என்னும் வேள்விப் படலத்து விருத்தத்தில்,

இன்னுயிரேனும்

கொள்ளுத நீது கொடுப்பது நன்ருல்

என்றமைத்திருக்கின்றது.

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்

வானகமு மாற்றலரிது

என்ற குறட் கருத்தை

உதவாம லொருவன் செய்த உதவிக்குக் கைம்மா ருக

மதயானை யனைய மைந்த மற்றுமுண் டாக வற்ரே

என்ற கிட்கிந்தைப் படலச் செய்யுளில் பொதிந்து வைத்தார்.

சிதைவகல் காதற்ருயை

என்ற விருத்தத்தில்

உதவிகொன் ருர்க்கென்றேனு மொழிக்கலா முபாய முண்டோ

என்பது

எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு

என்ற குறளன்ரே?

ஊருணி நிறையவு முதவு மாடியர்

பார்கெழு பழுமரம் பழுத்தற் ருகவும்

என்ற மந்திரப்படலச் செய்யுளில்

ஊருணி நீர்நிறைந் தற்றே

என்பதும்

பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்ருல்

என்பதும் எடுத்தமைக்கப்பட் டிருக்கின்றன.

எலியெலா மிப்படை அரவம்யான்

என்ற குகன் வாக்கு

எலிப்பகை நாக முயிர்ப்பக் கெடும்

என்ற வள்ளுவர் வாக்கன்றோ?

கிளை கண்டு நீங்குகின்றுழி, "வன்றெறு" என்பதில்

ஒன்றுரைத் துயிரினு மொழுக்க நன்றென

என்பது

ஒழுக்க முயிரினு மோம்பப்படும்

என்ற குறள்தானே?

வேண்டின வேண்டினர்க் களிக்கு மெய்த்தவம்

என அகத்தியப் படலத்தில் எடுத்தாண்டது

வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்

ஈண்டு முயலப் படும்

என்னும் குறளை.

இராவண ஸந்யாசியை

ஆமையி னிருக்கையன்

என்றது

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்

என்ற குறளன்றோ?

உயர்ந்தவர்க் குதவிய உதவி யொப்பவே

என்ற உவமானம்

உதவி வரைத்தன் றுதவி உதவி

செயப்பட்டார் சால்பின் வரைத்து

என்ற குறளே.

மான நோக்கிற் கவரிமா வனைய நீரார்

என மந்திரிகளைக் கூறியது

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

என்ற குறளை நினைந்தன்றோ?

நாகபாசப் படலம் 271—வது செய்யுள்

பேரியலாளர் செய்கை ஊதியம் பிடித்து மென்னார்
மாரியை நோக்கிக் கைம்மா றியற்றுமோ வையமென்றான்

என்பது

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு

என்ற குறளின் கருத்தே.

நம்மாழ்வாருடைய திருவாய்மொழியிற்கண்ட அகப்பைக் குறிகளும் சில உண்டு. கவந்தன் படலத்தில்

ஆண்பாலோ பெண்பாலோ அப்பாலோ எப்பாலோ

என்றது

ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா வலியுமல்லன்

என்ற பதினைந்தாந் திருவாய் மொழியில் 10—வது பாசுரம்.

வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரு முணர்வும்போல் உள்ளும் புறத்து முளனென்ப

என்ற அயோத்யா காண்டக் காப்பு

தேனும் பாலுங் கன்னலு மமுது மாகித் தித்தித்தென்
ஊனி லுயிரி லுணர்வினி னின்ற வொன்றை யுணர்ந்தேனே

என்ற எழுபத்தெட்டாந் திருவாய்மொழி 4—வது பாசுரத்தை அடியொற்றியதாம்.

கருமுகில் தாமரைக் காடு பூத்துநீ
டிருசுட ரிருபுறத் தேந்தி யேடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான்

என்னும் திருவவதாரப் படலச் செய்யுளுக்கு

கருமாணிக்க மலைமேல் மணித்தடந் தாமரைக் காடுகள்போல்
திருமார்பு வாய்கண்கை யுந்திகாலுடை யாடைகள் செய்யபிரான்

என்ற எழுபத்தொன்பதாந் திருவாய்மொழி முதற்பாசுரம் எழுவாயாகக் காண்கின்றது.

வந்தாப் போலே வாராதாய் வாரா தாய்போல் வருவானே

என்ற அறுபதாந்திருவாய்மொழி 9-வது பாசுர அடியை

வருவாய் போல வாராதாய்

என பிரமாத்திரப் படலத்தில் 227-வது செய்யுளிலும்

வாராதே வரவல்லாய்

என விராதன் துதியிலும் ஏற்றமை ஸ்பஷ்டம்.

ஆதி யந்த மரியென யாவையும்
ஓதி னாரல கில்லன வுள்ளன
வேத மென்பன மெய்ந்நெறி நன்மையன்
பாத மல்லது பற்றிலர் பற்றிலார்

என்ற சிறப்புப்பாயிரச் செய்யுள்

அறிந்தன வேத வரும்பொரு ணூல்கள்
அறிந்தன கொள்க வரும்பொரு ளாதல்
அறிந்தன ரெல்லாம் அரியை வணங்கி
அறிந்தனர் நோய்க ளறுக்கு மருந்தே

என்ற திருவாய்மொழியின் சாரமே.

தமிழ்ச் செய்யுள்.—கம்ப ராமாயணத்தின் முக்யாம்சங்களை ஆராயுமுன்னர்த் தமிழ்ச் செய்யுளின் குணாகுணங்களை ஆராய்ந்தறிதல் வேண்டும்.

எழுத்து முதலா வீண்டிய் வடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்

என்றது தொல்காப்பியம். நன்னூல்

பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்

என உரைத்திருக்கின்றது. நன்னூலிற் காட்டிய உவமையால் ஒரு விசேஷம் உண்டு. அஃதாவது, உயிரில்லாவிடின் உடல் பிணமேயாம். அசையும் சீரும் அடியும் முதலிய உறுப்புக்கள் அமைந்து கிடப்பினும், சத்தில்லாவிடின் செய்யுள் சவம்போல் சாரமற்றதே. ஆகவே, கவிகள் தங்கள் மனத்திற் குறித்த பொருளாகிய உயிரைச் செய்யுளாகிய உடலில் அமைக்கும் சிருட்டி கருத்தர்கள் என்றவாறும். 'மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்' என்றவர் கருத்தும் இதுவே.

பாவினை ஒலிபெறப் படனஞ் செய்திடும்
நாவின னாகி நாற்கவிப் புலவோர்
புதுமொழி புணர்ப்புழிப் பொறிப்பவ னாகியும்
மனப்படு மொருபொருள் மதித்தவ ரொருமொழி
எடுத்ததற் கியைபுற வெதிரெதிர் பன்மொழி
தொடுப்பதும் பெயர்வினை கோப்புணப் பிறிதடி
தொடுப்பதுந் தொடைபல தொடர்ந்தொரு பாவாய்
முடிப்பதுங் குறிக்கொளல் முதற்கா ரணமே

என்றும்

சொற்பொரு ளணிநலம் தோயா தாயினும்
மடியா தெடுத்தடி மடக்குத லின்றாய்
யாப்பின துறுப்பிழுக் காதிறு தியில்வினை
கோப்புண முடித்த லதன் முதற் குறிப்பே

என்றும்

அருமணி நிரலவைத் தன்ன சொன்னலன்
ஒளியத னுட்சிறந் தன்ன பொருணலன்
அழகதற் காங்கமைந் தன்ன அணிநலன்
உரனுடைப் பழம்பாட் டுணர்வழி புணர்ந்தோர்
உரனுடைப் பாட்டுணர் வாய்மையின் வருமே

என்றும் கூறியிருப்பதைப் பார்த்தால், கல்வி கற்கு மாணுக்கரெல்லாருமே கவிகள் ஆகிவிடலாமெனக் காண்கின்றது. இது பிற்கால இலக்கணம்; காலத்துக்கேற்ற கோலமாகவே இருக்கின்றது. ஆயினும், "தெய்வப் புலவனுக்கு நா உணரும்; சித்திர ஓடாவிக்குக் கை உணரும்" என்ற பழமொழியால் கவிதா மர்மம் தமிழர்கள் ஒருவாறு உணர்ந்ததே என்பது போதரும். இந்த மர்மம் உணர்ந்தவரே 'என்றுங் கிழியா தென்பாட்டு' என்ற உறுதியுடையோர்.

முற்காலத்துக் கவிகளும் பிற்காலத்துக் கவிகளும்.—

முற்காலத்துக் கவிகளெல்லாம், எதுகை மோனை முதலிய இலக்கணங்களைப் பொருட்டு செய்யாமல், ப்ரபஞ்ச விலாஸத்தை ஒட்டித் தாங்கள் கூறவிரும்பும் பொருளை மாத்திரமே நன்கு கவனித்தவர்கள். பிற்காலத்துக் கவிகள், தாங்கள் கூற விரும்பிய பொருளை யாதொரு பொருட்டு செய்யாது, தாங்கள் பாடுகின்ற செய்யுள்கள் யாப்பிலக்கணத்துக் கியைந்திருக்கின்றனவா என்பதை மாத்திரமே நன்கு கவனிப்பவர்கள். புனைந்துரை வகையால் புலவர் இல்லனவும் கூறுப வெனினும், முற்காலத்துக் கவிகள், உலகத்தோர்க்கு

நன்மை பயத்தற்கு, நல்லோர்க் குள்ளனவற்றை ஒழிந் தோர் அறிந்தொழுகுதல் அறமெனக் கருதி நல்லோர்க் குள்ளனவற்றில் சிறிது இல்லனவும் கூறினர். பிற்கா லத்துக் கவிகள், கல்லாத வொருவனைப் பரிஷ்கார மாகக் கற்றவ னென்பர்; காடெறியுமவனை நாடாள்வா னென்பர்; பொல்லாத வொருவனை நல்லா னென்பர்; போர்முகத்தை யறியானைப் புலியே றென்பர்; வழங் காத கையனை வள்ளல் என்பர். முற்காலத்துக் கவி கள் தன்மைநவிற்சியை விரும்பினவர். பிற்காலத்துக் கவிகள் உயர்வுநவிற்சியை விரும்புவோர். பிற்காலத் துக் காவியங்கள் தண்டியலங்காரத்தில் கூறிய காவ்ய லக்ஷணம் நன்கமையப் பெற்றவைகளே. ஆயினும் முற்காலத்துக் காவியங்களின் அழகும் ஆழமும் இங்கே கிடைக்கவேமாட்டா. முற்காலத்துக் கவிகள் நிறை குடங்கள். பிற்காலத்துக் கவிகள் குறைகுடங் கள். முற்காலத்துக் கவிகள் பொருட்சுவை நிறைந் தவர்கள். பிற்காலத்துக் கவிகள் சொற்சுவை நிறைந்த வர்கள்.

✓கம்பர் கவித்திறம். — கம்பர் பொருட்சுவை சொற் சுவை ஆகிய இரண்டும் நிறைந்தவர். இவரிடத்தில் தன்மைநவிற்சியும் உண்டு; உயர்வுநவிற்சியும் உண்டு. இவர் கவியில் இலக்கணவமைதியும் உண்டு; அழகும் ஆழமும் உண்டு. “இவருடைய கவிகள் வெண்சொல் லும் புதைபொருளும் உடையனவாய் எத்துணை வல் லாரையும் முதலில் மயக்கிப் பொருள் வெளிப்பட்ட

விடத்துப் பேரானந்தமுறச் செய்யும் இயல்பின." முற் காலத்துக் கவிகட்கும் பிற்காலத்துக் கவிகட்கும் இடை நின்றவ ராதலால், முன்னோர்களுடைய சிறப்பும் உடையவர்: பின்னோர்களுடைய குறைபாட்டில் ஒரு கூறும் உடையவர்.

கோதாவரி நதியை வர்ணிக்கின்ற இடத்தில்,

புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் றாகி
அவி அகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிஅ ளாவிச்
சவிஉறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவிஎனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்

எனக் கவிலக்ஷணத்தை ஆற்றின்மே லேற்றிக் கூறிய வாற்றானும், பம்பைப்பொய்கையை வர்ணிக்குமிடத்தில்

கற்பக மனைபவக் கவிஞர் நாட்டிய
சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது

எனக் கூறிய வகையானும், கம்பர் கருத்திற்கொண்ட கவிபாவம் இன்னதென அறிதலாகும். கவிமர்மத்தை ஒருவாறு கண்டவர்கள் அனேக கவிராயர்கள். கவிமர்மத்தை உள்ளவா றறிந்தவராதலின், கம்பநாடர் ஒருவரே தமிழகத்தில் கவிச்சக்ரவர்த்தியாவர்.

ஆயினும், இராமாயணத்தில் வருகின்ற சில அபூத கற்பனைகளைப் பற்றி இக்காலத்தில் சிலர் கம்பரிடம் அருவருப்படைவது உண்டு. "இம்மாண் கதைக்கோ ரிறையாய இராமன்" மானிட உருவங்கொண்ட முழு முதற் பொருளென்றும், தசகண்டனை இராவண

னைச் சங்கரித்து ராக்ஷஸ குலத்தைக் கருவறுக்கும் பொருட்டே அம் முழுமுதற்பொருள் திருவவதரித்த தென்றும் கருத்திற் கொண்டவ ராதலால், கம்பர் சில இடங்களில் ப்ரபஞ்ச நாடகத்தின் எல்லையைக் கடந்து போவாராயினர். மானுட ஸம்பந்தமுடைய ஸந்தர்ப் பங்களில் இராமர் மனிதராகவே நடித்தலான், கம்பர் அன்ன ஸந்தர்ப்பங்களில் இராமரை ப்ரபஞ்ச நாடகத் துட்படுத்தியே ப்ராக்ருத விரோதமின்றிப் பாடுவர். நிருதர் எதிர்ப்பட்டவிடத்து, இராமரும் நிலங்கடந்த நெடுமுடி யண்ணலாகக் காட்டலால், அன்னவிடங் களில் கம்பரும் அப்ராக்ருதமாகவே பாடுவர். இவ் வபூத கற்பனைகளுக்காகக் கம்பரை வெறுப்போமாயின், வான்மீகரையும் வெறுப்பவராவோம். "பித்தர் சொன்ன வும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன் னப் பெறுபவோ" எனக் கம்பர் அக்காலத்தே தமக்கு பத்ரமான பாதுகாப்பை அமைத்துக்கொண்டனர்.

கம்பராமாயணத்தின் ஒருபுடை ஆராய்ச்சி. — யந்தி ரத்தைப் பிரித்துப் பார்த்தவர்களே அதன் கட்டுக் கோப்பை நன்கறிவார்கள். உறுப்பிலக்கணங்களை உய்த் துணர்ந்தவரே யாப்பிலக்கணத்தை நன்கறிபவர். மனத் தின் விகற்பங்களை நன்கு கவனித்தவர்களே மனோ தத்வத்தை உள்ளபடி உணர்பவர்கள். கவிகளைப் பன் னிப் பன்னிப் படித்தவரே கவி லக்ஷணத்தை நன்கறிந் தவராவர். ஆதலால் நாமும் கம்பர் சொல்லைக் கேளா மல் அவர் காவியத்தைப் பன்னிப் பார்ப்போம்.

கம்பர் அடைகளையும் உவமைகளையும் ஒன்றின்மே லொன்றாக அடுக்கிக்கொண்டு போதலால், கருத்து மறை பட்டுக் கதையும் இடையீடுபட்டு மறந்துபோகின்றது என ஓர் இங்கிலிஷ் ஆசிரியர் குறைகூறுகின்றனர். வரைக்காட்சி—பூக்கொய்தல் — நீர்விளையாட்டு — படையெழுச்சி—யுத்தம் — கைக்கிளை — பெரும்பொழுது முதலான வற்றை வர்ணிக்கின்ற இடங்களில் கருத்து மறைபடு வதும் கதை இடையீடுபட்டு மறந்துபோவதும் உண் மைதான். கம்பர், அரசரோடும் பிறரோடும் நெருங் கிப் பழகினவர்; காடும் மேடும் நாடும் நகரமும் திரிந் துழன்றவர்; ஸுக துக்கங்களையும் கஷ்ட நஷ்டங்களை யும் அனுபவசித்தமாக அறிந்தவர். அதனால், எந்தக் காட்சியும் எந்த ஸந்தர்ப்பமும் விரித்தெடுத்துரைப்பது அவர்க்குச் சற்றும் ப்ரயாஸமாகத் தோன்றுவ தில்லை. தற்குறிப்பேற்றி உண்மைகளை விளக்குவது அவருக்கு ஆயாஸமாக இருப்பதில்லை. கல்வியின் விரிவும் கற்பனா சக்தியும் உடையவ ராகையால், சொல்லும் பொருளும், பருந்தும் நிழலும்போல், பிணைந்து செல்கின்றன. அத னால் அவருடைய கவியானது தட்டுத்தடையின்றி கதித் துச் செல்கின்றது. இத்தகைக் கவியின் காவியத்தை நாடோறும் நாலைந்து பாட்டாகப் படிக்கின்றவர்கள், இராமாயண ஸாரத்தை எளிதில் க்ரகிக்கமாட்டார்கள். ஒரு மூச்சிலே ஐம்பதும் நூறுமாகப் படிக்கின்றவர் களுக்கே இராமாயணத்தின் அருமை தெரியும். மலை யின்மீதிருந்து கண்டனுபவிக்கின்ற காட்சியை மலையடி

வாரத்திலிருந்து கண்டனுபவிக்கல் ஆகுமோ? கம்ப ராமாயணத்தைக் கத்யபாகமாக ஓதுகின்றவர்களும், யாதொரு படலத்தை முற்றும் ஒரு மூச்சிலே படித்தாலன்றிப் பயனெய்தார்.

கம்பராமாயணத்தில் வருஷந்தோறும் யாதொரு காண்டத்தில் சிற்சில படலங்களை மாத்திரமே பரீக்ஷைக்குப் பாடமாகப் படிக்கின்ற மாணுக்கர்கள், 'கம்பரை மஹாகவி—கவிச்சக்ரவர்த்தி எனக் கொண்டாடுகின்றார்களே. நாங்கள் படித்த பாகத்தில் அப்படிக் கொண்டாடுதலுக்குரிய மஹிமை ஒன்றும் எங்களுக்கு உதிக்கவில்லையே' என்று தமது தமிழாசிரியரிடம் உரைத்துக்கொள்வதுண்டு. ஒரு அரமனையை அமைக்கும் சிற்பியினுடைய அருமை அவ்வரமனையில் ஓரறையை மாத்ரமே கண்டவர்களுக்கு விளங்காதன்றே. ஒரு காண்டத்தையாயினும் முற்ற ஓதிப் பழகினாலன்றிக் கம்ப ராமாயணத்தின் அருமை புலப்படாது.

**கம்பஸூத்ரம்.**—கம்பராமாயணம் கற்பதில் எப்படிப்பட்டவர்களும் இடர்ப்படுதலான இடங்கள் உண்டு. அவை கம்பஸூத்ரம் என்னப்பட்ட இடங்கள். ஸூத்ரத்தின் மர்மத்தை அறிந்த ஸூத்ரதாரிக்கு இடர் ஒன்றும் இல்லை. இந்த ஸூத்ரங்களைச் சில பரம்பரை வித்வான்கள் மாத்திரமே அறிவர். இந்த ஸூத்ரங்களில் எப்படிப்பட்டவர்களையும் மாட்டிவைத்து இவர்கள் பெருமலைவு செய்வர். இந்த ஸூத்ரங்களின் மர்ம

மாவது:—இலக்கணத்தோடு பொருந்தாத முடிபுகளும், அகராதி கொண்டு அறிதலாகாத அர்த்த ப்ரயோகங் களுமேயாம். இப்படிப்பட்ட முடிபுகளையும் ப்ரயோகங் களையும் கம்பர் வேண்டுமென்றே பல விடங்களில் அமைத்ததாகத் தோன்றுதல் இல்லை. தாம் பாடுதலுற்ற விஷயத்தில் மாத்திரமே சிந்தனை வைத்து அசுவதாட்டி யாக விரைந்து அன்றன்று அறுநூறும் எழுநூறுமாக விருத்தங்களைப் பாடிச் செல்கையில், சிற்சில ஸந்தர்ப் பங்களில் இப்படிப்பட்ட முடிபுகளும் ப்ரயோகங் களும் தாமே அமைவனவாயின. சிற்சில ஸந்தர்ப்பங் களில் சில அர்த்த ஸூக்ஷ்மங்களைக் குறிப்பாகப் பொதிந்துவைத்திருப்பதும் வியக்கத்தக்கதே. தமது காலத்திற்றானே இப்படிப்பட்டவைகளைக் கம்பர் சிக் கறுத் துரைத்ததைக் கொண்டு, ஆசிரிய பரம்பரையாகக் கம்ப ராமாயணம் படித்து வந்தவர்கள், இந்தக் கம்ப ஸூத்ரங்களை விளக்கிவந்தனர். இங்ஙனம் வரலாற்று முறைமையில் வருகின்ற ஆசிரியர்களுடைய தொகை நாட்குநாள் அருகிவருதலால், இவைகளைப் பலர் கூடித் திரட்டி வெளிப்படையாக ப்ரசுரம் செய்யாவிட்டால், இராமாயணத்தில் அநேக செய்புள்கள் இருந்தும் இல்லனவாகிவிடும். அநேக ஸூத்ரங்கள் பாடபேத மடைந்து உருமாறி வருவனவும் ஆகின்றன. இராமா யணம் படிக்கின்றவர்களுக்கு வேறு பதவுரை பொழிப் புரைகளும் அகலவுரைகளும் வேண்டா. கம்ப ஸூத் திரங்களை விளக்குதலான ஸாதனத்தை மாத்திரம் தேடிக்

கொண்டால், தமிழ் மாணுக்கர்களுக்குக் கம்ப ராமாயணம் மிகவும் நல்ல காலக்ஷேபம் ஆகும்.

பம்பைப் பொய்கைப் படலம் நாற்பத்தொன்ருவது செய்யுள் வருமாறு.

மண்டுயின் றனநிலைய மலைதுயின் றனமறுவில்
பண்டுயின் றனவிரவு பணிதுயின் றனபகரும்
விண்டுயின் றனகழுதும் விழிதுயின் றனபழுதில்
கண்டுயின் றிலநெடிய கடறுயின் றனகளிறு.

இதில், 'மண்துயின்றன' (—பூமியிலுள்ளார் உறங்கினர்;)..........'பண்துயின்றன' (—பாடும்பேர் உறங்கினர்;)..........'கழுதும் விழிதுயின்றன' என்பது வரையில் பொருள் கொள்வதில் மருள் இல்லை. 'பழுதில் கண் துயின்றில நெடிய கடல் துயின்றன களிறு' என்னும் இறுதியடிக்குப் பொருள் கொள்வதில் மயக்கம் உண்டாகின்றது. (கடல் துயின்றிடு களிறு என்று பாடங்கொண்டால் பொருள் வெளிப்படை). ஸந்தர்ப்பத்தை ஒட்டி, திருப்பாற்கடலில் துயிலும் (களிருகிய) பெருமான் கண்கள் துயின்றில (பிராட்டியைப் பிரிதலான்) என்பதாம். களிறுகளாகிய இராமலக்ஷ்மணர் என்பதும் பொருந்தும். களிறு கண் துயின்றில(து) என விகுதி தொகுத்தலாகவுமாம். இங்ஙனம் கொள்ளவறியாது சில பெரும்புலவர் திகைக்கக் கண்டிருக்கிருேம்.

ஆயமா ஞகர்தா ழாழியா னேயலால்
காயமா ஞயிஞன் யாவனே காவலா
நீயமா ஞேர்தியால் நிருதமா ரீசஞர்
மாயமா ஞயிஞன் மாயமா ஞயிஞன்.

மாராமப் படலத்தில் நாற்பத்தொன்பதாவதான இந்தச் செய்யுள் பலரை மடக்குவது. ஈற்றடி மாய(மாகிய) மான் ஆயினனுக்கு மா(பெரிய) யமான் (யமன்) ஆயினன் என்பதாம். யமன் என்பது யமான் என நீட்டலாகக் கொள்ளல் வேண்டும்.

உவமானங்கள்.—கம்பர் ஆங்காங்கு எடுத்துக் காட்டும் உவமானங்கள் மிகப் பொருந்தினவைகளாகவும் கம்பீர முடையவைகளாகவும் ஒருசார் ஒழுக்கம் கற்பிப்பவைகளாகவும் இருக்கின்றன. சில உதாரணங்களைக் காண்போம். தசரதன்

வையக முழுவதும் வறிஞ னோம்புமோர்
செய்யெனக் காத்தினி தரசு செய்கின்றான்.

தாடகை நெஞ்சை ஊடுருவிச் சென்ற இராமபாணம்

புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற் றன்றே.

தசரதன் தான் தவஞ்செய்யுமாறு காட்டுக்குப் போகவும் இராமனுக்குப் பட்டங்கட்டவும் வேண்டும் என்று கூறினதைக் கேட்ட அமைச்சர்கள்

இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென விருந்தார்.

பதினான்கு வருஷகாலம் வனவாஸம் செய்வாயாக எனக் கைகேசி சொன்னதைக் கேட்டபோது ஸ்ரீராமன் முகம்

அலர்ந்த செந்தாமரையினை வென்ற தம்மா.

சந்திர சைலத்தின் அடிவாரத்தில் தசரதன் செல்லும் போது,

தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவர் எனுமிது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்னுருள் உரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையும் தந்நிற மாக்கிய இரதம்.

அம்மலை யடிவாரத்தில் படுத்தெழுந்த போது,

தீயவரொ டொன்றிய திறத்தரு நலத்தோர்
ஆயவரை அந்நிலை அறிந்தனர் துறந்தாங்
கேய்வரு நுண்பொடி படிந்துடன் எழுந்தொண்
பாய்பரி விரைந்துதறி நின்றன பரந்தே.

மாயமானைப் பின்தொடர்ந்து சென்ற இராமன், அம்மானின் வஞ்சனையால் தன்னை யடைந்த இலக்குவனோடு மீண்டு வந்து, சீதையின்றி வெறுவிதாய்க் கிடந்த இடத்தை யடைந்து,

கூடு தன்னுடை யதுபிரிந் தாருயிர் குறியா
நேடி வந்தது கண்டில தாமென நின்றான்.
கைத்த சிந்தையன் கனங்குழை அணங்கினைக் காணு
துய்த்து வாழ்தர வேறொரு பொருளிலான் உதவ
வைத்த மாநிதி மண்ணொடு மறைந்தன வாங்கிப்
பொய்த்து ளோர்கொளத் திகைத்துநின் றூரையும் போன்றான்.

சித்ரகூடப் பருவதத்தின்மீது சீதைக்குப் பலவகைக் காட்சிகளை விளக்கிச் செல்கையில்,

அளிக்கு நாயகன் மாயைபுக் கடங்கினன் எனினும்
களிப்பில் இந்தியத் தியோகியைக் கரக்கிலன் அதுபோல்
ஒளித்து நின்றுள ராயினும் உருத்தெரி கின்ற
பளிக்க றைச்சில பரிமுக மாக்களைப் பாராய்

எனச் சீராமன் உரைப்பதாக உரைப்பதுங் காண்க. சிறையிலிருந்த சீதை, அநுமன் கொடுத்த கணையாழியைப்பெற்ற அளவில்

இழந்தமணி புற்றர வெதிர்ந்ததென லானுள்:
பழந்தன மிழந்தன படைத்தவரை ஒத்தாள்:
குழந்தையை உயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்:
உழந்துவிழி பெற்றதொ ருயிர்ப்பொறையு மொத்தாள்

என்ற உவமைகளின் அருமையை உய்த்துணர்க.

புத்ரவாஞ்சையை வாற்சல்யம் என்பதின் சப்தார்த்தத்தோடு பொருந்தக் கன்றினிடத்துப் பசுவுக்குள்ள அன்பைக் காட்டியே விளக்குவர் பல்லிடத்தும். "தாயருக் கன்று சார்ந்த கன்றெனுந் தகைய னுனன்" (335, மீட்சிப்படலம்). இராமன் பிரிவைக் கேட்ட கோசலை "கன்று பிரிந்துழிக், கறவை யொப்பக் கரைந்து கலங்கினுள்" என்றும், இராம லக்குவர்களை விடைகொடுத்தனுப்பிய ஸுமித்ரை "இரண்டுகன் ருெரீஇ, வெருவரு மாவினிற் ருயும் விம்மினுள்" என்றும் வருதல் காண்க.

உருவகம்.—சிற்சில இடங்களில் உருவகங்களை வெகு நயமாக அமைப்பர் கம்பர். மந்த்ராலோசனை மண்டப நோக்கிச் சீராமன் செல்கின்றவனை மாளிகைகளினின்றும் ஸ்திரீகள் பார்த்ததை

நீளெ ழுத்தொடர் வாயிலின் குழையொடு நெகிழ்ந்த
ஆள கத்திரு டரமியத் தலத்தினு மலர்ந்த:
வாள ரத்தவேல் வண்டொடு கெண்டைகள் மயங்கச்
சாள ரத்தினும் பூத்தன தாமரை மலர்கள்

என உருவகப்படுத்தி யிருக்கிருர். இராமனுக்குப் பட்டம் கட்டுமாறு மந்த்ராலோசனை செய்கையில், மந்த்ரிமார்களுடைய மனக்குறிப்பை அறிந்து ஸுமந்த்ரன் உரைப்பதை

மந்திரக் கிழவர்தம் முகத்தால்
எழுதி நீட்டிய இங்கிதம் இறைமகற் கேறத்
தொழுத கையினன் சுமந்திரன் முன்னின்று சொல்லும்

எனக் கூறியிருக்கின்றது. தன் பிதாவுக்குத் தான் சரமக்ரியை செய்யும்உரிமை யிழந்ததைச் செவியுற்ற பரதன், நல்ல குலத்திற் பிறந்தும் தான் பயனற்றவன் ஆயின படியை

துன்னு தாள்வளம் சுமந்த தாழையில்
பன்னு வான்குலைப் பதடி ஆயினேன்

என்றுனைக் கூறியிருக்கின்றது. இராமன் இவ்வாண் யம் வந்துற்றதனால் இராக்கதர் அழிவர் என அகத்தியர் மகிழ்வுறுவதை,

வெந்திறல் அரக்கர்விட வேர்முத லறுப்பான்
வந்தனன் மருத்துவன் எனத்தனி வலிப்பான்

எனக் கூறியிருக்கின்றது. பிரமன்தானும் வேத முத லியவற்றால் அறியலாகாத பரம்பொருளைத் தாம் இப் பொழுது நேரில் காணப்போகிறதை நினைத்து அகத்தி யர் உவப்பதை

இரைத்தமறை நாலினொ டியைந்தபிற யாவும்
நிரைத்தநெடு ஞானநிமிர் கல்வின்நெடு நாளிட்
டுரைத்தும்அய னுலும்அறி யாதபொருள் நேர்நின்
றுரைக்குதவு மால்எனும் உணர்ச்சியின் உவப்பான்

எனக் கூறியிருக்கின்றது.

சீதை தன் கற்பின் திறத்தை எரியிடை மூழ்கி வெளிப்போந்து விளக்கியவிடத்து, பிரமனும் உருத்திர

னும் தசாதனுடனே இலங்கை யடைந்து இராமனைப் போற்றுதல் செய்கையில், தசரதன் இராமனை நோக்கி,

அன்று கைகயன் மகள்கொண்ட வரமென்னு மயில்வேல்
இன்று காறுமென் னிதயத்தி னிடைநின்ற தென்னைக்
கொன்று நீங்கல திப்பொழு தகன்றதுன் குலப்பூண்
மன்ற லாகமாங் காந்தமா மணியின்று வாங்க

என்றுனைக் கூறியிருக்கின்றது.

உத்ப்ரேக்ஷை.—அந்தந்த ஸந்தர்ப்பத்திற்கு ஏற்பக் கம்பர் தம்முடைய குறிப்பை ஏற்றிச் சொல்வது மிகவும் வியக்கத்தக்கதாக இராநின்றது. ஓர் உதாரணம் காண்போம். கைகேசி தன் கணவனை இன்னல் படுத்திய இரவு புலர்கையில்

சேணுலாவிய நாளெலாமுயி ரொன்றுபோல்வன செய்துபின்
ஏணுலாவிய தோளினானிட ரெய்தவொன்று மிரங்கிலா
வாணிலாநகை மாதராள்செயல் கண்டுமைந்தர்மு னிற்கவும்
நாணினாளென வேகினாள்நளிர் கங்குலாகிய நங்கையே.

எண்டருங்கடை சென்றயாமம் இயம்புகின்றன வேழையால்
வண்டுதங்கிய தொங்கல்மார்பன் மயங்கிவிம்மிய வாறெலாம்
கண்டுநெஞ்சு கலங்கியஞ்சிறை யானகாமர் துணைக்கரம்
கொண்டுதம்வயி றெற்றியெற்றி விளிப்பபோன்றன கோழியே.

சிரித்தபங்கயம் ஒத்தசெங்கண் இராமனைத் திருமாலைஅக்
கரிக்கரம்பொரு கைத்தலத்துயர் காப்புநாணணி தற்குமுன்
வரித்ததண்கதிர் முத்தமாகியிம் மண்ணனைத்தும் நிழற்றமேல்
விரித்தபந்தர் பிரித்ததாமென மீனொளித்தன வானமே.

இரட்டுறமொழிதல்.—கம்பர் ஒரோவிடத்து இரட்டுற மொழிவர். சீதையின் அழகை இராவணனிடம் வர்ணித்தவுடனே, சூர்ப்பநகை அவனை நோக்கி உரைத்த

நாக உரைத்த மூன்று செய்யுள்களில் ஒவ்வோரடிடைத் தமிழாசிரியர்கள் இரட்டுறமொழிதலாக முதலில் விளக்கும்போது நம்மனோர்க்கு உண்டாகும் உவகை உள்ளடங்குவதன்று.

இந்திரன் சசியைப் பெற்றான்: இருமூன்று வதனத் தோன்றன்
தந்தையும் உமையைப் பெற்றான்: தாமரைச் செங்க ணானும்
செந்திரு மகளைப் பெற்றான்: சீதையைப் பெற்றாய் நீயும்.
அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்கிலை உனக்கே ஐயா

என்பதின் இறுதியடி, "முடிவாகப் பார்த்தால் அவர்க்கெல்லாம் நன்மை இல்லை, உனக்கே நன்மை உண்டு; அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெண்பாலை அடைந்து பெறும் இன்பம் இன்பமன்று; நீ இவளை எய்தியடையும்இன்பமேஇன்பமாம்" என்றும், "அவர்க்கே நன்மை (உண்டு,) உனக்கு (நன்மை) இல்லை" என்றும் இரண்டுவிதமாகப் பொருள்படுகின்றது.

பாகத்தில் ஒருவன் வைத்தான். பங்கயத் திருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான். அந்தணன் நாவில் வைத்தான்.
மேகத்தின் மின்னை முன்னே வென்றநுண் ணிடையை நீயும்
மாகத்தோள் வீர பெற்றால் எங்ஙனம் வைத்து வாழ்தி.

இதில் 'எங்ஙனம் வைத்து வாழ்தி' என்பது "நீ அவளை யாண்டு வைத்து வாழ்வாய்?" என்றும், "நீ அவளைப் பெற்றால் (எங்ஙனம் வாழ்தி) வாழாயே!" என்றும் இருதிறப்படுகின்றது. இங்ஙனம் இவ்விரண்டிடத்தும் இரட்டுற மொழிந்தது. செம்மொழிச் சிலேடையும் அன்று, பிரிமொழிச் சிலேடையும்

அன்று: அவ்வவ்வடியை இயைவுற எடுத்தும் படுத்தும் "எழுத்திய றிரியாப் பொருடிரி புணர்மொழி, இசைத் திரி பாற்றெளி வெய்து மென்ப" என்றபடி, இசை யறுத்துச்சொல்லும் வேறுபாட்டின் அளவினதேயாகும்.

பிள்ளைபோல் பேச்சி ளுளைப் பெற்றபின் பிழைக்க லாற்ருய்.
கொள்ளைபோ கின்ற செல்வம் அவளுக்கே கொடுத்தி ஐய!
வள்ளலே உனக்கு நல்லேன் மற்றுநின் மனையில் வாழும்
கிள்ளைபோல் மொழியார்க் கெல்லாம் கேடுசூழ் கின்றே னன்ருே

என்பது "சீதையை நான் உனக்கு இயைவித்தலால், உன்னுடன் இன்பம் எய்தப்பெருது வருந்துவராதலின் உன் மனைவிமார்களுக்குக் கேடு சூழ்கின்றேன்" என்று பொருள்படுகின்றது. "கற்புடையவளான சீதையை நீ தீண்டினுல் இறந்துபடுவை; அதனுல் அவர்கள் மங்கல சூத்திரம் இழப்பர்" என்னும் பொருளும் ஈண்டு த்வனிப்பது காணப்படும். இங்கே சூர்ப்பநகை கூறியவெல்லாம் அவள் தன்னை யறியாது கூறிய வசைகவிகளாகக் கொள்ளவேண்டும். ஊழின் வயத்ததான எதிர்கால நிகழ்ச்சி தானே த்வனிக்குமாறு இங்ஙனம் பாடுவது மஹா கவிகளுக்கே ஸாத்யமான அற்புத சக்தி.

இராமனுக்கு முடிசூட்டுவதென்று மந்த்ரிமார்களோடு ஆலோசனைசெய்து உறுதியானவளவில் தசரதன் கணிகளை நோக்கி

வடிமழு வாளவற் கடந்த மைந்தற்கு
முடிபுனை கடிகைநாள் மொழிமின் என்றனன்

என்ற இடத்தில் (கடிகை என்பது நாழிகை) "முடி புனைதற்கான நாழிகை (முகூர்த்தம்) உள்ள நாளைச் சொல்லுங்கள்" என்று பொருளாயினும், முடிபுனைதல் தடைப்படுதலான எதிர்கால நிகழ்ச்சிக்கேற்ப, கடிதல் என்பதற்குத் தடைசெய்தல் என்றும் பொருள் உண்டு ஆதலால், தசரதன் வாயில் "கடிகை நாள்" என வந்து விட்டதாக அமைத்திருப்பதும் மேற்காட்டியதனே டொக்கும்.

நாகபாசப் படலத்தில் இந்த்ரஜித்தன்மீது அநுமார் மலைகளையும் மாமரங்களையும் எடுத்தெறிய, இந்த்ர ஜித்தன் "இந்த மலைகளையும் மரங்களையும் கொண்டா என்னை ஜயிக்கப்போகிறாய்?" என்று கேட்க அநுமார்

வில்லெ டுக்கஉரி யார்கள் ஐயசில வீரர் இங்குமுளர் மெல்லியோய்
கல்லெ டுக்கஉரி யானு நின்றனன தின்று நாளையிடை காணலாம்

என்றார். "வில்லெடுத்துச் சண்டை செய்ய எங்கள் பக்கத்திலும் சிலர் உளர்: நான் கல்லெடுக்க உரியேனாய் நின்றேன்" என்று சொல்லுகின்றவர், "வீடணன் எங் கள் பக்கல் ஆனமையால், இராவணன் முதலானபேர் களுக்குக் கொள்ளிவைத்துக் குடமுடைத்துக் கல்லு மெடுக்கப் போகிறான்" என்ற பொருளும் தோன்று மாறு இரட்டுற மொழிந்திருப்பது ஸந்தர்ப்பத்தை நோக்குமிடத்தில் மிகவும் வியக்கத்தக்கதே.

இராவண சங்காரம் முடிந்தபிறகு (மீட்சிப் பட லத்தில்) இராமன் பிராட்டியை அலங்காரத்துடன்

அழைத்துவருக என்று விபீஷணனை அனுப்பினன். அங்ஙனம் வருகின்றவளை அராவைப்போலே சீறி யெழுந்து பார்த்துச் சீராமன் "ஊண்டிற முவந்தனை" என்பது முதலாக ஏழுபாட்டளவில் நிந்திக்கலுற்றான். இந் நிந்தனையை "என்றனன் புலவா புந்தியான்" எனக் கம்பர் முடித்துளார். அப்புறம் அங்குற்ற தசரதர் சீதையைப் பார்த்து,

> நங்கை மற்றும்நின் கற்பினை உலகுக்கு நாட்ட
> அங்கி புக்கிடென் றுணர்த்திய வதுமனத் தடையேல்

என்றும்

> உன்னைக் காட்டினன் கற்பினுக் கரசியென் றுலகில்
> பின்னைக் காட்டுதற் கரியதென் றெண்ணியிப் பெரியோன்

என்றும் கூறியதாகக் கூறியிருக்கின்றது. ஆகவே, சீராமன் தன் மனத்தில் க்ரோதங்கொண்டு நிந்தித்திலன் என்பது போதரும். லோகாபவாதத்துக்கு அஞ்சிச் சீறுவதாகப் போக்குக் காட்டி உரைக்கின்ற உரை விநோதமென்றே குறிப்பிக்கும்படி கம்பர் அந்நிந்தை யில்,

> பெண்மையும் பெருமையும் பிறப்புங் கற்பெனும்
> திண்மையும் ஒழுக்கமும் தெளிவும் சீர்மையும்
> உண்மையும் நீயெனும் ஒருத்தி தோன்றலால்
> வண்மையின் மன்னவன் புகழின் மாய்ந்ததால்

என்ற கவியை நிந்தாஸ்துதியாக இரட்டுற மொழிந்து இடைப்பெய்து வைத்தார். "சீதையாகிய நீ ஒருத்தி பிறத்தலாலே, பெண்மை முதலிய குணங்களெல்லாம்,

ஈகைக்குணமில்லாத அரசனது புகழ் மாய்ந்தாற்போலே, மாய்ந்துவிட்டன" என நிந்தையாகவும், "பெண்மை முதலிய குணங்கள் நீயாக (உருவெடுத்து) உதித்தலாலே, கொடையால் ஜனகன் பெற்ற புகழ் அவன் மனையவளாக நின்றுவிட்டது (அல்லது) கொடையாளனான சனகனது ஏனைப்புகழ் இல்லையாய் மாய்ந்தது:" உன்னைப் பெற்ற புகழ் சிறந்தது என்பது குறிப்பெச்சமாய்த் துதியாகவும் கொள்ள நிற்பது வியப்பினும் வியப்பே. இன்னோரன்னவற்றைக் கம்ப ஸூத்ரமாகவும் கொள்ளலாம்.

**கவிசமத்காரம்.**—ஏற்ற சில ஸந்தர்ப்பங்களில் உரைக்கின்ற கருத்து உள்ளத்தைவிட்டகலாமல் ஊன்றி வேர் கொள்ளுமாறு மிகவும் சமத்காரமாக உரைப்பர் கம்பர். தசரதன் அரிய பல யாகங்களைச் செய்தவன் என்பதை

மெய்யாய வேதத் துறைவேந்தருக் கேய்ந்த யாரும்
செய்யாத யாக மிவன்செய்து மறந்த மாதோ

என்றுரைத்தார். தாடகை வதையில் ஸ்ரீராமனது வில்லாற்றலைக் கூறுமிடத்தில்

மானு மக்கணம் வாளியைத் தொட்டதும்
கோல விற்கால் குனித்ததுங் கண்டிலர்.
கால னைப்பறித் தக்கடி யாள்விட்ட
சூல மற்றன துண்டங்கள் கண்டனர்

என்றும், ஜனக மஹாராசனுடைய அரமனையில் சிவனுடைய வில்லை இறுத்ததை,

தடுத்திமை யாம விருந்தவர் தாளின்
மடுத்ததும் நாணுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினின் யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்

என்றும் உரைத்தார். ஒப்பனையழகிலும் சீதைக்கு இயற்கையழகு விசேடித்தது என்பதை

உமிழ்சுடர்க் கலன்கள் நங்கை உருவினை மறைப்ப தோரார்
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன அழகினுக் கழகு செய்தார்

என்றுரைத்தார்.

முடிசூட்ட விரும்பிய எண்ணத்தை அறிவிக்குமாறு இராமனை அழைக்க, அவன் வந்து அடிபணிந் தெழுந்த வளவில், தசரதன் அவனைத் தழுவியதை,

நலங்கொள் மைந்தனைத் தழுவினன் என்பதென்? நளிநீர்
நிலங்கள் தாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான்,
விலங்க லன்னதிண் தோளையும் மெய்த்திரு விருக்கும்
அலங்கல் மார்பையும் தனதுதோள் மார்புகொண் டளந்தான்

என்பதாக உரைத்தார்.

இராமன் காட்டுக்குப் போனால் நான் உயிர்துறப்பேன் எனக் கைகேசியிடம் உரைக்கும் கருததை

உன்
கழுத்தின்நாண் உன்மகற்குக் காப்பின்நாண் ஆமென்றான்

என்பதாக உரைத்தார். பின் பட்டாபிஷேகமின்றிக் காட்டுக்குப் போகவேண்டிய இராமனை நினைத்துப் புலம்புகின்றவன்

நின்மேற் சொரிய
மண்ணும் நீராய் வந்த புனலை மகனே வினையேற்
குண்ணும் நீராய் உதவி உயர்கான் அடைவாய் என்றான்

என்பதாக உரைத்தார்.

தன்னை வஞ்சகமாக வதைத்தவன் சீராமன் என்று தறிந்தபோது வாலியானவன் இராமனை நோக்கி

வாய்மையு மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்த னேநீ பரதன்முன் தோன்றி னாயே

என்று பழித்ததாக உரைத்தார்.

பஞ்சவடியை அணுகும்போது கோதாவரியின் கரையே சென்ற இராமனும் சீதையும் ஒருவரையொருவர் நலம்புனைந் துணர்த்தும் நயத்தை நாம் வேறெந்தக் கவியினிடத்திலும் கண்டதில்லை.

நாளங்கொள் நளினப் பள்ளி நயனங்கள் அனைய நேமி
வாளங்கள் உறைவ கண்டு மங்கைதன் கொங்கை நோக்கும்
நீளங்கொள் சிலையோன். மற்றை நேரிழை நெடிய நம்பி
தோளின்கண் மனம்வைத் தன்ன சுடர்மணித் தடங்கள் கண்டாள்.

ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழையள் ளாகும்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்.
மாதவள் தானும் ஆண்டு வந்துநீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்.

வில்லியல் தடக்கை வீரன் வீங்குநீ ராற்றின் பாங்கர்
வல்லிகள் நுடங்கக் கண்டான் மங்கைதன் மருங்குல் நோக்க;
எல்லியங் குவளைக் கானத் திடையிடை மலர்ந்து நின்ற
அல்லியங் கமலங் கண்டாள், அண்ணல்தன் வடிவு கண்டாள்.

இனி உடனே இவர்கள் பிரியும்படி நேரிடுதலான தறுவாயில் இங்ஙனம் உரைத்தது மிகவும் பொருத்தமும் மனவுருக்கமும் காட்டுகின்றது.

த்வனி.—கம்பரிடத்தில் ஏனைக் கவிராயர்களைக் காட்டில் விசேஷித்த ஸாமர்த்யம் ஒன்று உண்டு. அஃதாவது, ஒரோவோர் கவியில் யாதொரு சொல், தன்னுற்றலா னன்றிக் குறிப்பால் வெகு சாதுர்யமான பொருள்களையும் இனமான அநேக பொருள்களையும் அற்புதமான நயத்தையும் த்வனிக்கும்படி செய்தலாம். இங்ஙனம் இவைகள் சுழியாறுபடுவது பெரிய கவிகளிடத்தில் ஏகதேசம்: கம்பரிடத்தில் ஸாதாரணம்.

பரதன் அரசியல் நடாத்தத் தடையில்லை: இராமன் காட்டுக்குப் போகவேண்டா எனக் கைகேசியிடம் தசரதன் உரைப்பவன்

மண்ணே கொள்நீ மற்றைய தொன்றும் மறவென்றான்

என்பதில் மண் என்பது இங்கே பூமியையும் அதன் ஆட்சியையும் குறிப்பதாயினும், இந்த மண் யாருக்கு வேண்டும் என எளிதுபடக் கூறியதாக அலக்ஷ்யம் த்வனிக்கின்றது.

காட்டை விட்டு நீங்கிவந்து அரசியலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டின வசிட்டரை நோக்கிச் சீராமன்

தேன்தரு மலருளான் சிறுவ! செய்வெனென்
றேன்றபின் அவ்வுரை மறுக்க மீட்டதோ?

என்று கூறுவதில், (தேன்தரு மலருளான் என்பது பிரமன். பிரமனுடைய சிறுவன்—வசிட்டன்) வசிட்டரே என்னாது பிரமனுடைய சிறுவனே என்றதனால், "நீ

இன்னும் இளைஞன். உனக்கு அறிவு முதிர்ச்சி சாலாது என்பது த்வனி.

ஜனக மஹாராசனிடம் விசுவாமித்ரர் சீராமனுடைய குலமுறையைக் கிளத்தி முடிக்கின்றவளவில்

கோதமன்றன் பன்னிக்கு முன்னையுருக் கொடுத்ததிவன்
போதுநின்ற தெனப்பொலிந்த பொலன்கழற்கால் பொடிகண்டாய்

என்று அகலிகையின் சாப விமோசனத்தைக் குறிக்கையில், பொடி என்று எளிதுபட உரைத்ததில், "இவன் பாத ஸ்பர்சமான தூளிக்கு இவ்வளவு மஹிமையானல், பாதஸ்பர்சத்தின் மஹிமையை உரைக்கவேண்டுமோ? திருமேனியின் ஸ்பர்சத்தால் இனி சீதை என்ன பேறு பெறுள்" என்றுற்போன்ற குறிப்பு த்வனிக்கின்றது.

விராதன் துதியில்

கடுத்தகராம் கதுவநிமிர் கையெடுத்து மெய்கலங்கி
உடுத்ததிசை அனைத்தினும்சென் றுலிகொள்ள உறுதுயரால்
அடுத்தபெருந் தனிமூலத் தரும்பரமே பரமேஎன்
றெடுத்தொருவா ரணமழைக்க நீயோஅன் றேனென்றுய்?

என கஜேந்த்ரோபாக்யானத்தைக் குறித்ததில், 'ஏன் என்றுய்' என்றதனுல், "மற்ற தேவர்கள் யானையின் இன்னலைக் கேட்டும் வாளா இருந்தனர். பரமே என்ற போது, தாங்கள் க்ஷுத்ர தேவதைகளாதலின் கஜேந்த்ரன் அழைப்பது தம்மை அன்றென வாளா இருந்தனர். அவர்களெல்லாம் ஏனென்றுதானுங் கேளாத

பாவிகள். திர்யக்கான ம்ருகத்தை ஏனென்று வந்து ரக்ஷித்த நீ என்னை ரக்ஷிக்காமல் விடுவாயோ" என்று இங்ஙனம் இனமான பல பொருள்கள் தோன்ற நிற்பது ப்ரத்யக்ஷம்.

காவ்ய பாத்ரங்களின் மனநிலைக் கியைந்தவாறு கவிகளை இயைப்பது காவ்யங்களில் பொருட்சுவை சிறத்தலான உபாயம். காளிதாஸன், ஷேக்ஸ்பியர் முதலிய நாடக கவிகளைப்போல் கம்பரும் தமது காவியத்தில் சில ஸந்தர்ப்பங்களில் இந்த மர்மத்தை அநுஸரித்திருப்பதனால், இவர் மனுஷ ப்ரக்ருதியை நுனித்தறிந்தவர் என்பது புலனாகின்றது.

சூர்ப்பநகை உவமை முதலிய உதவிகொண்டு சொல்லளவாகச் சொல்லக்கேட்டு இராவணன் சீதையின் ஸௌந்தர்ய லஹரியில் மயங்கியிருக்கையில் காணும் உருவெளித்தோற்றப் பகுதியை ஆராய்ந்து பார்ப்போம். ஒரு பொருளை நேரிற் கண்டவர்கள், பின் நனவில் கருதும்போது அதனைக் கண்டது கண்டவாறே சித்திரித்துக்கொள்வது கூடும்: கனவில் தோன்றினும் அப்பொருள் கண்டது கண்டபடியே தோன்றும். நேரில் காணாமல் ஒருவர் உரைப்பக் கேட்ட பொருள், கேட்ட உரையின் உதவியால், உரைத்தவர் உரைத்த ஆற்றலுக் கேற்ப, ஒருவாறு மனத்தில் சித்திரித்துக்கொள்வது கூடுமேயன்றி, உள்ளது உள்ளபடியே தோன்றுவது இல்லை.

அம்பும் அனலும் நுழையாக் கனவந்த காரத்
தும்பர் மழைகொண் டயலொப் பரிதாய துப்பின்
கொம்பர் குரும்பைக் குலங்கொண் டதுதிங்கள் தாங்கி
வெம்பும் தமியேன்முன் விளக்கெனத் தோன்று மன்றே.

மருளூடு வந்த மயக்கோ மதிமற்று முண்டோ
தெருளாதி தென்னே திணிமை யிழைத்தாலும் ஒவ்வா
இருளூடிரு குண்டலம் கொண்டும் இருண்ட நீலச்
சுருளோடும் வந்தோர் சுடர்மாமதி தோன்று மன்றே.

புடைகொண்டெழு ... ... ... ...
இடைகண்டிலம் அல்ல தெல்லா வுருவுந் தெரிந்தாம்.
விடநுங்கிய கண்ணுடை யார்இவர் மெல்ல மெல்ல
மடமங்கைய ராய்என் மனத்தவர் ஆயி னாரே.

இம்மூன்று செய்யுளும் இராவணன் கண்ட உருவெளித் தோற்றத்தை விளக்குகின்றன. மூன்றாவது செய்யுளில் "மெல்ல மெல்ல, மடமங்கையராய் என் மனத்தவர் ஆயினாரே" என்று இராவணன் உரைக்கும் உரையின் உள்ளுறையை உள்ளுற நோக்குமிடத்தில், சூர்ப்பநகை காட்டிய உவமானங்களால் உவமேயங்களை ஒவ்வொன்றாக ஒன்றோடொன்று பொருத்தி இராவணன் கருத்தில் அமைத்துக்கொண்ட உருவமே ஈண்டு வெளித் தோற்றமான சீதையின் தோற்றம் என்பதும், இங்கே சீதையின் வர்ணனை ப்ரத்யக்ஷபாவனையைத் தருவதின்று என்பதும், இச் செய்யுள்களை மேலோட்டாக ஓதுவார்க்கும் நன்கு புலப்படும்.

இங்ஙனம் தான் கண்ட உருவம் சீதையோ அன்றோ என்று ஐயுற்றவன், சூர்ப்பநகையை அழைத்து "இங்கு நின்றவ ளாங்கொல் இயம்பிய சீதை?" என்று கேட்க,

இராமானந்த பரவசையான அவள், இராவணன் கேட்கின்ற நோக்கத்தை அறியாது, தன்னையும் மறந்து, தனக்கு உருவெளித் தோற்றமாக,

> செந்தாமரைக் கண்ணொடும் செங்கனி வாயி னோடும்
> சந்தார்தடந் தோளொடும் தாழ்தடக் கைக ளோடும்
> அந்தார்அக லத்தொடும் அஞ்சனக் குன்ற மென்ன
> வந்தான்இவ னாகும்அவ் வல்வில் இராமன் என்றாள்.

இவள் இராமனை நேரிற் கண்டவ ளாதலின், இவளுக்குப் புலனான உருவெளித் தோற்றத்தின் வர்ணனை, இராமனது உருவப்படத்தை எதிரில் வைத்துக் காட்டினாற் போல இராநின்றது. இங்ஙனம் இராவணன் நேரில் காணாத சீதையின் உருவெளித்தோற்ற வர்ணனையை ஏற்றபெற்றி மங்கலாகவும், சூர்ப்பநகை நேரிற்கண்ட இராமனது உருவெளித்தோற்றத்தை ஏற்றபெற்றித் தெளிவாகவும் அமைத்திருப்பதும், இதற்கடுத்தனவாக

> பெண்பாலுரு நான்இது கண்டது. பேதை நீஇண்
> டெண்பாலும்இ லாததோர் ஆணுரு வென்றி என்னே?
> கண்பாலுறு மாயை கவற்றுதல் கற்ற நம்மை
> மண்பாலவ ரேகொல் விளைப்பவர் மாயை என்றான்
>
> ஊன்றும்உணர் வப்புறம் ஒன்றினும் ஓட லின்றி
> ஆன்றும்உள தாம்நெடி தாசை கனற்ற நின்றாய்க்
> கேன்றான்எதி ரேவிழி நோக்கும் இடங்க டோறும்
> தோன்றும்அனை யாள்இது தொன்னெறித் தாகும் என்றாள்.
>
> அன்னாள் அதுகூற அரக்கனும் அன்ன தாக
> நின்னால் அவ்விராமனைக் காண்குறு நீர்என் என்றான்.
> எந்நாள் அவன்என்னை இத்தீர்வரும் இன்னல் செய்தான்
> அந்நாள் முதல்யானும் அயர்த்தில னாகும் என்றாள்

என வரும் மூன்று செய்யுள்களும், கம்பர் மனுஷ ப்ரக்ருதி யறிந்த மஹாகவி என்பது புலப்படுத்தும். நாக பாசம் எய்வதற்கு முற்பட்ட கவிகளின் பாவத்தையும் பிற்பட்ட கவிகளின் பாவத்தையும் உய்த்துணர்க.

பாவிகம்.—'பாவிகமென்பது காப்பியப் பண்பு.' அஃதாவது, ஒரு காப்பிய முற்றிலும் கவியின் கருத்தால் அமைந்ததோர் பண்பு: என்றால் உலகியலில் சில உத்தம தர்மங்களும் சில அதம தர்மங்களும் கவி கருதியாங்கு அமைந்து தோன்றுவது எனபதாம். உலகியலாவது எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழ்வது. காவியத்துக்கு கௌரவம் ஏற்படுவது பாவிகத்தால். இதற்குக் காரணம் கவிகற்பனை. கவிகற்பனையாவது, உத்தம பாவங்களும் அதம பாவங்களும் தாமே விளங்குமாறு சரித்ரத்தைக் கவியானவன் ஏற்றபெற்றி இயைத்துக்கொள்வதே. இன்னும் இந்த பாவிகம் ஸந்தர்ப்பத்திற் கேற்றவாறு காவிய பாத்ரங்களுடைய உள்ளக் கருத்தாலும் ஸம்பாஷணையாலும் விளங்கும்.

ஒருவர் வார்த்தையை நம்பலாமா நம்பலாகாதா என்கிற ஸந்தர்ப்பத்தில், 'அவ்வார்த்தை இராமோக்தியா கிருஷ்ணோக்தியா' என்று உசாவுவது ஒரு வழக்கு உண்டு. அதனால் பெறப்படுவதாவது, இராமனுடைய குணவிசேஷம் உறுதிப்பாடு: 'இராம வாக்குக்கு இரண்டுண்டா' என்பது. இராமாயணத்தில் இவ்வுறுதிப்பாடானது, பிதுர் வாக்ய பரிபாலனம், ஸஹோதர வாஞ்சை, நட்பு, அடைந்தவரை ஆதரித்தல் முதலிய

வற்றில் சிறந்து தோன்றுவது ப்ரத்யக்ஷம். இங்ஙனமே சீதையின் கற்புநிலைமையும், உடன்பிறந்தோ ரொற்று மையும், அதர்மத்தின் விளைவும் முதலியன இராமாய ணத்தில் சிறந்து தோன்றுவதும் ப்ரத்யக்ஷமே. இவை யெல்லாம் கதையில் அங்குரித்த அம்சங்களேயாயி னும்,* சில சில ஸந்தர்ப்பங்களில் இவை கம்பராமாய ணத்தில் கவிகற்பனையால் மிகவும் கௌரவமாக உள் ளத்தைக் கவர்கின்றன.

முடிதரிக்க இராமன் இயைந்ததும் பிதுர் வாக்ய பரி பாலனம்: பரதனுக்கு அதனைத்தரிக்க இராமன் இயைந்த தும் பிதுர் வாக்கிய பரிபாலனமே. முடிபுனையுமாறு தச ரதன் வேண்டின போது,

தாதை யப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காத லித்திலன் இகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்து
யாது கொற்றவன் ஏவினன் அதுசெய லன்றோ
நீதி யெற்கென நினைந்தஉதன் பணிதலை நின்றான்.

"பரதன் அரசாள்க: நீ வனவாஸம் செய்க" என்று தச ரதன் ஏவலாகக் கைகேசி கூறியபோதும்,

மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ? என்
பின்னவன் பெற்றசெல்வம் அடியனேன் பெற்ற தன்றோ?
என்இனி உறுதி அப்பால்? இப்பணி தலைமேற் கொண்டேன்:
மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன்: விடையுங் கொண்டேன்

* 'The Ramayan is the only poem which inspires our breasts with a love of goodness in the entire sense of the word. We rise from its perusal with a loftier idea of almost all the virtues that can adorn man—of truth, of filial piety, of paternal love, of female chastity and devotion, of a husband's faithfulness and love, of fraternal affection, of meekness, of forgiveness, of fortitude, of universal benevolence.'

என்றான். கைகேசியின் உரையைக் கேட்குமுன் கொண்டிருந்த முகச்செவ்வி அவள் உரைக்கும்போதும் வேறுபட்டா னல்லன்; அவள் உரைத்தபின்னும் வேறு பட்டானல்லன்.

இப்பொழு தெம்ம னோரால் இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன் றிருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா.

இங்ஙனம் சிந்தையிலும் வார்த்தையிலும் தோற்றத்திலும் எவ்வித வேறுபாடும் தோன்றாது பிதுர் வாக்ய பரிபாலனத்தில் திரிகரண சுத்தியுடையனாக இருந்தான் என்று காட்டிய பாவிகத்தில் வேறொரு அம்சத்தையும் கம்பர் தொடர்புபடுத்தினார். அது ராஜ்யபாரப் பொறுப்பின் அருமை. இவ்வருமையை இராமன் நன்குணர்ந்தவன். ஆகவே கைகேசியின் ஸதி ஸர்ப்பனையால் அரசிழப்பதை இழவாகக் கொள்ளாது நலமாகவே கொண்டானு மென்பது

தெருளுடை மனத்து மன்னன் ஏவலிற் றிறம்ப அஞ்சி
இருளுடை உலகம் தாங்கும் இன்னலுக் கியைந்து நின்றான்
உருளுடைச் சகடம் பூண்ட உடையவன் உய்த்த காரே
றருளுடை யொருவன் நீக்க அப்பிணி அவிழ்ந்த தொத்தான்.

என்ற கவிக்கூற்றால் போதரும். சீதை எரியுற்று மீண்டபோது அங்குற்று மகனைக்கண்டு அகமகிழ்ந்த தசரதன் தன்னிடம் ஒரு வரம் வேண்டிக்கொள்ளுமாறு மகனை வேண்ட, இராமனும்

தீய வென்றுநீ துறந்தவென் தெய்வமு மகனும்
தாயும் தம்பியு மாம்வரம் தருகெனத் தாழ்ந்தான்.

அதற்கு தசரதன்

பரதன் அன்னது பெறுகதான் முடியினைப் பரித்திவ்
விரத வேடமற் றுதவிய பாவிமேல் விளிவு
சரதம் நீங்கல தாமென்றான்.

அப்போது இராமன்

ஊன்பி ழைக்கிலா உயிர்நெடி தளிக்கும்நீ ளாசை
வான்பி ழைக்கிது முதலென தாள்வுற மதித்து
யான்பி ழைத்ததல் லால்என்னை ஈன்றஎம் பிராட்டி
தான்பி ழைத்த துண்டோ என்றான்.

இதுவும் முற்கூறியதைப் பின்னும் நன்றாக வற்புறுத்து கின்றது. அன்றியும், தந்தை தாய்ப் பேணு நலமும் ஸஹோதர வொற்றுமையு மாகிய பல அம்சங்கள் இந்த ஸந்தர்ப்பத்தில் பாவிகமானவாறு காண்க.

சீதையின் கற்பின் திறம் பலவிடங்களில் பலவித மாக உரைத்திருக்கின்றது. சீதை தீக்குளித்து மீண்ட வளவில் அக்னிதேவன் இராமனை நோக்கி,

அங்கியான் என்னைஇவ் வன்னை கற்பெனும்
பொங்குவெந் தீச்சுடப் பொறுக்கி லாமையால்
இங்கணேந் தேன்உறு மியற்கை நோக்கியும்
சங்கியா நிற்றியோ எவர்க்கும் சான்றுளோய்

என்றானாகக் கூறியிருப்ப தொன்று. திருவடி தொழுத படலத்தில் சீதையின் கற்பை விளக்கிய பல செய்யுள் களில்

விற்பெருந் தடந்தோள் வீர வீங்குநீ ரிலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்தா ளாய நங்கையைக் கண்டே னல்லேன்:
இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்

என்றது நனிநயம் பயப்ப தொன்றே. இராமதூதனை அரக்கனோ எவனோ என்றையுற்ற சீதை,

இரக்கமே யாகவந்திங் கெம்பிரா னாமஞ் சொல்லி
உருக்கினன் உணர்வைத் தந்தான் உயிரிதின் உதவியுண்டோ

என்றதும் ஒன்றே. சீதை சிறையிருந்ததை அநுமான் கண்டதான காட்சிப்படலத்தில் மூன்று முதல் இருபத்தொன்பது வரையில் இருபத்தேழு செய்யுள்களும் சீதையின் இருப்பை விளக்குவன. அவற்றில் பல கூறுகள் அவள் கற்பின் திண்மையை விளக்குவனவே. அவற்றுள் கற்பின் பாவிகத்தை, நடு நாயகமாக நின்ற

அருந்து மெல்லட காரிட அருந்துமென் றழுங்கும்;
விருந்து கண்டபோ தென்னுறு மோவென்று விம்மும்;
மருந்து முண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்;
இருந்த மாநிலம் செல்லரித் திடவுமாண் டெழாதாள்.

என்ற செய்யுள் நன்கு விளக்குகின்றது. இச்செய்யுளின் ஏற்றடி நாயகமணியின் ஒளியே போலும்.

இராமனுடைய தம்பியரில் இலக்குவன் இராமனிடத்தில் பாராட்டிய அன்பின் விசேஷம், ஸுமித்ரை இலக்குவனை நோக்கி

ஆகாத தன்றால் உனக்கவ்வனம் இவ்வயோத்தி
மாகாத விராமன் நம்மன்னவன் வையமீந்தும்
போகாத உயிர்த்தாயர் நம்பூங்குழல் சீதைஎன்றே
ஏகாய்இனி இவ்வயின் நிற்றலும் ஏதம்.

மகனே! இவன்பின் செல்தம்பி
என்னும் படியன் றடியாரின் ஏவல் செய்தி:
மன்னும் நகர்க்கே இவன்வந் திடின்வா அதன்றேல்
முன்னம் முடி

என்று கற்பித்த முன்னரே விளங்கிற்று. இராமனுக்கு நீர்வேட்கை தணிக்கத் தண்ணீர் கொணரச் சென்ற இலக்குவன் அயோமுகியால் சிறிதுநேரம் வரவியலாமல் காலந் தாழ்த்தபோது, இருட்டிலே தம்பியை நினைந்து புலம்புகின்ற இராமன்

என்னைத் தரும்எந் தையைஎன் னையரைப்
பொன்னைப் பொருகின் றபொலன் குழையாள்
தன்னைப் பிரிவேன் உளன்ஆ வதுதான்
உன்னைப் பிரியா தஉயிர்ப் பலவோ?

என்றுனுகக் கூறியிருப்பது, இலக்குவனிடத்தில் இராமனுக்குள்ள அன்பை விளக்குகின்றது.

கிட்கிந்தையில் சீதையின் அணிகல முடிப்பை அவிழ்த்துக் காட்டியபோது, இராமன் ஏனை அணிகலங்கள் சீதைக் குரியவை என அடையாளக் குறிப்பறிந்து பாதசிலம்புகளை ஐயமுற்றவிடத்து, இலக்குவன் பாதசிலம்புகள் ஸீதைக்கே உரியனவென்று உறுதிகூறி ஏனையவற்றை அறியகில்லானுக இருந்தனன் என வருவது, இலக்குவனுடைய நிறையை நன்குணர்த்தும் இலக்குவனுடைய உத்தமோத்தம குணம் புலப்படுவது ஓரிடத்தில் இலங்கையின் மேலைக்கோட்டை வாயிலில் இராவணன் வந்து இலக்குவனோடு போர்புரிந்து

தோல்வியுறுவானாக, தனது தோல்விக்கு விபீஷணன் காரணமாதல் அறிந்து விபீஷணன்மீது ஒரு சக்தியை ப்ரயோகித்தான். அப்போது,

தோற்ப னென்னினும் புகழ்நிற்கும்: தருமமும் தொடரும்:
ஆர்ப்பர் நல்லவர். அடைக்கலம் புகுந்தவன் அழியப்
பார்ப்ப தென்? நெடும் பழிவந்து தொடர்வதன் முன்னம்
ஏற்பன் என்தனி மார்பினென் றிலக்குவன் எதிர்ந்தான்.

அதுகண்டு அதைத் தம்மார்பில் ஏற்றுக்கொள்ளுமாறு விபீஷணனும் அங்கதனும் சுக்ரீவனும் அநுமனும் ஒரு வர்முன் ஒருவராக விரைந்து செல்லலுற்றனர். இவ் வனைவரையும் விலக்கி இலக்குவன் முந்துறச் சென்று அந்த சக்தியைத் தன் மார்பில் ஏற்றுக்கொண்டான்.

தசரத குமாரர் நால்வருடைய குணவிசேஷமும்,

காணா நிலமகளைக் கைவிட்டுப் போவானைக் காத்துப் பின்பு
போனானும் ஒருதம்பி. போனவர்கள் வருமவதி போயிற்றென்று
ஆனாத உயிர்விடஎன் றமைவானும் ஒருதம்பி. அயலே நாணாது
யானுமிவ் அரசாள்வன். என்னேஇவ் வரசாட்சி இனிதே யம்மா.

மன்னிற்பின் வளநகரம் புக்கிருந்து வாழ்ந்தானே பரதன் என்னும், சொன்னிற்கும் என்றஞ்சிப் புறத்திருந்தும் அருந்தவமே தொடங்கி னாய, என்னிற்பின் உளனிவனு மென்றேபின் அடிமையுனக் கிருந்த தேனும், உன்னிற்பின் இருந்ததுவும் ஒருகுடைக்கீழ் இருப்பதுவும் ஒக்குமென்றான்.

என்ற சத்ருக்நன் கூற்றால் விளங்கும். இவன் குணம் விளங்கும் இடம் வேறில்லை. பாதனை மெச்சாதவரும் மெச்சினர். இராமனை ஏசலுற்ற வாலி

வாய்மையு மரபுங்காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனேநீ பரதன்முன் தோன்றினையே

என்றான். ஸேனையை அக்கரையில் கண்டு கறுவுதலுற்ற குகன் பரதனுடைய விரத வேடத்தைக் கண்டபோது,

ஆயிரம் இராமர் நின்கேள் ஆவரோ தெரியின் அம்மா

என்று புகழ்ந்தான். கைகேசியிடமிருந்து வந்து வருந்திய பரதனுடைய கருத்தை யறிந்த கோசலை

முன்னை நுங்குல முதல் உளோர்கள்தாம்
நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்?

என்றாள்: பதினான்கு வருடமுங் கழிதலுற்ற அளவில் இராமன் வந்திலனென்று தீப்பாயப் புகுதலைக் கண்டு,

எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின்னருளுக்கரு காவரோ?
புண்ணி யம்எனும் நின்உயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?

என்று கூறினாள். சுக்ரீவன் வாலியைப் போர்க்கழைத்தது கண்ட இலக்குவன் அது அந்யாயமென்று இராமனிடம் முறையிட இராமன்:

பித்தாய விலங்கி னொழுக்கினைப் பேச லாமோ?
எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தார்கள் எல்லாம்
ஒத்தாற் பரதன் பெரிதுத்தமன் ஆவ னுண்டோ?

என்றான். இங்ஙனம் இக்குமாரிடம் விளங்குங் குண விசேடத்தைக் காட்டினும் உலகில் ஸஹோதரர்களுக்கு ஏற்றமான பாவிகம் வேறென்ன வேண்டும்?

இராமன் குகனிடம் கொண்ட நட்பின் திறம், வனம் புகுமுன் தம்மோடு உடன்வருவதாக வருந்தி வேண்டிய குகனை நோக்கி

முன்புளம் ஒருநால்வேம் முடிவுள தெனவுன்னு
அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளர்ஆனோம்

என்றதனால் விளங்கும். அனுமன் வந்தபோது அசோக வனத்தில் புலம்பியிருந்த சீதை

ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிஉன் தம்பிநீ
தோழன் நங்கை கொழுந்தி எனச்சொன்ன
ஆழி நண்பினை உன்னி அழுங்குவாள்

என்றது அதற்குற்ற ஸாக்ஷி. சுக்ரீபனோடும் விபீஷணனோடும் கொண்ட நட்பு வேறு திறத்தது.

ஸந்தர்ப்பத்துக் கேற்ற சந்தம். — கம்பரிடத்தில் மற்றொரு விசேடம் உண்டு. அவர் நடையானது ஸந்தர்ப்பத்திற் கேற்ற வாறாக கம்பீரமும் இன்னோசையும் மிடுக்கும் தளர்ச்சியும் கொண்டிருப்பது. ஸந்தோஷசெய்தி உரைக்குமிடத்தில் சந்தத்திற் கேற்பக் கூத்தாடவுங் கூடும். வ்யஸனமான செய்தி உரைக்குமிடத்தில், படிக்கின்றவன் பாட்டைப் பரபரப்பாகப் படிக்கப் புகுந்தாலும், அப்பாடல்கள் பரபரப்பாக நாவிலே உழல்வதில்லை. கதாநாயகன் அழுகின்ற இடத்தில் கதையைப் படிக்கின்றவனும் அழுவான்; அவன் களிக்கின்ற இடத்தில் இவனும் களிப்பெய்துவான். இது கவிவல்

லோர்க்கு மாத்ரமே கைவந்த மர்மம்; எல்லார்க்கும் இது செய்ய இயலாது.

கம்பரும் வால்மீகியும்.—இங்ஙனமாகக் கம்ப ராமாயணத்தின் அழகுகளையும் நயங்களையும் எடுத்துக்காட்டுவது எப்படிப்பட்டவர்களுக்கும் இலகுவான காரியம் அன்று. அழகு நிறைந்திருக்கின்ற இடத்திலே தனித் தனியான கூறுகளின் அழகை எடுத்துக்காட்டுவது இயலுமோ? ஆனாலும், கம்ப ராமாயணம் வால்மீகி ராமாயணத்தின் ஆதாரவைக்கொண்டு பாடினதுதானே; இதற்கென்ன ஏற்றமுண்டு எனச் சிலர் கூறுவர். இரண்டையும் படித்துப் பார்த்தவர்களே இதற்கு ஸமாதானம் கூறத் தகுந்தவர்கள். கால்ட்வெல் என்னும் அத்யக்ஷர் "ஹோமருடைய இலியட்டுக்கும் போப்பினுடைய இலியட்டுக்கும் என்ன பேதமோ, அதேபேதம் வால்மீகி ராமாயணத்துக்கும் கம்ப ராமாயணத்துக்கும் உண்டு" எனச் செப்பியிருக்கிறார். பௌவர் என்னும் அத்யக்ஷர் "நாம் வால்மீகி ராமாயணத்தையும் படித்திருக்கிறோம்; கம்ப ராமாயணத்தையும் படித்திருக்கிறோம். வால்மீகி முனிவர், விரிவாய்க் கூறுகின்றவராயினும் விளங்கக் கூறுகின்றவர்; கம்பர், சில இடங்களில் சுருங்கக் கூறுகின்றவராயினும் சில இடங்களில் விரித்துக் கூறுகின்றவர். இன்பந் தருவனவான சொற்போக்குகளும் அலங்காரமான கற்பனைகளும் ஆங்காங்கு விசேஷமா

யிருக்கின்றன. ஆயினும், வால்மீகியை வியந்து கூறுவதோ கம்பரையே உவந்து கூறுவதோ எனத் துணிதல் கூடாமல் இடர்ப்பட்டோம்" என்றெழுதியிருக்கிறார்.

வடமொழிப் பயிற்சி இல்லாதவர்களும் வால்மீகி ராமாயணத்தின் நேரான இங்க்லிஷ் மொழிபெயர்ப்பை எதிரில் வைத்துக்கொண்டு ஒத்திட்டுப்பார்த்தால், கம்பர் ஸாமான்யரல்லர் என்பதும், கதையளவாக மாத்ரமே வால்மீகி ராமாயணத்தைத் தழுவினவர் என்பதும், அங்கைக் கனியாகும். வால்மீகி ராமாயணத்தின் பால காண்டத்தின் முதலிலுள்ள பாகமெல்லாம் பிற்பட்ட வடமொழி ஆசிரியர்களால் ஏற்றப்பட்ட சுலோகங்கள் என்று அநேக இங்க்லிஷ் ஆசிரியர்கள் யூகிக்கின்றார்கள். இப்படிப்பட்டவைகளைக் கம்பர் தழுவினாரல்லர். வால்மீகி ராமாயணம், தசரதன் பிள்ளைப்பேறடையும் படி என்ன செய்யலாமெனத் தன் மந்த்ரிமார்களைக் கூட்டி ஆலோசனை செய்ததாகவும், அவர்களும் அந்த யாகத்தைச் செய்யலாம் இந்த யாகத்தைச் செய்யலாமென்று பலபடப் பேசியதாகவும், அதன்மேல் ஸுமந்த்ரன் தான் ஸனற்குமார மகரிஷியிடம் கேட்ட மர்மத்தை அரசனிடம் அந்தரங்கமாய் உரைத்ததாகவும், அதன்மேல் அரசன் கலைக்கோட்டு மகாமுனிவர் வரத் தக்கதென் றறிந்ததாகவும் உரைத்திருக்கிறது. கம்ப ராமாயணம், "பிள்ளைப்பேறில்லையே இனி நாடென்னாகும்" என்ற தசரதனை நோக்கி வசிட்டர் தேவரஹஸ்

யத்தை மனத்தில் சிந்தித்துக் கலைக்கோட்டு முனிவரை அழைத்துப் புத்ரகாமேஷ்டியாகம் பண்ணினால் புத்ர பாக்யம் உண்டாகுமெனக் கூறினதாய்ச் சுருக்கி இன்றி யமையாத அளவாகக் கூறியிருக்கின்றது. வால்மீகத்தில் வருகின்ற கலைக்கோட்டு முனிவர் ஸாதாரணராகக் காண்கின்றனர். கம்பருடைய கலைக்கோட்டு முனிவரை நினைக்கும்போதே அச்சமும் அற்புதமும் மனத்தில் உதிக்கின்றன. ஜனக மஹாராஜன் தசரதற்குத் தூதுபோக்கினது முதல் பரசுராமரைக் கண்டவரையில் நிகழ்ந்த சரிதம் வால்மீகத்தில் மிகச் சுருக்கமாகக் கூறியிருக்கக் கம்பநாடர் அச்சரிதத்தைத் தாம் வேண்டியவாறு மலைகளையும் காடுகளையும் ஸேனைகளையும் வர்ணித்து விரித்துவிட்டார். இரண்டாவது அயோத்யா காண்டத்தை வால்மீகி ராமாயணத்தில் படிப்பது மிகவும் ஆயாஸம் தருவதாய் இராநின்றது. இங்கே வால்மீகி வார்த்தை கிழவார்த்தையாகக் காண்கின்றது. இங்கே கம்பநாடர், சரிதத்தை வெகு திறமாக நாடக அமைப்பேபோல உலகத்தோடு மிகப் பொருந்துமாறு உரைத்திருக்கின்றனர். இந்தக் காண்டத்தில் உள்ள வேற்றுமையை மாணாக்கர்கள் நேரிலே படித்துப் பார்த்தே கம்பருடைய ஸாமர்த்யத்தைச் சீர்தூக்கியறிய வேண்டும்.

தமிழ் இராமாயணத்துக்கு வால்மீகமே முதனூலென்று கம்பரே சொல்லிவிட்டார். யுத்தகாண்டத்திற்

கூறிய இரணியப்படலம் கம்பருடைய ஸ்ருஷ்டி, இராம சரிதத்தில் இரணியவதையை இடைப்பெய்து கூறுவது மற்றொன்று விரித்தலென்ற குற்றமாம் என்பர் சிலர். பாரகாவியம் செய்த ஆசிரியர் இது குற்றமாகுமென்று கொண்டால் அங்ஙனம் கூறார். ப்ரஹ்லாத சரித்ரத்தில் மிகப் பற்றுடையராய் அங்ஙனங் கூறினருமல்லர். இச் சரித்ரத்தை விபீஷணன் கூற்றாகவன்றோ கூறினர்? ஸ்ரீராமனுடைய மஹிமையை இராவணனுக்கு வற்புறுத்திக் காட்டி இராவணன் வணங்கி உய்யுமாறு எடுத்துரைத்தது இச்சரித்ரம். ஆகவே இது மற்றொன்று விரித்தலாகாது. இரணியப்படலம் ஒன்று தவிர ஏனைக் கம்பராமாயண முற்றும் அழிந்துவிட்டாலும் பெரிதன்று; கம்பருடைய கவிதா ஸாமர்த்யத்தையும் இயற்கைப் புலமையினையுங் காட்ட இப்படலமொன்றுமே போதிய சான்றாகும். யுத்தகாண்டமே கம்ப ராமாயணத்தில் மிக மிடுக்கான காண்டம் எனத் தமிழ்வல்லார் கூறுவதுண்டு. இவ்விரணியப்படலமோ அக்காண்டத்தின் ஏனைப்படலங்களினும் மிடுக்குடையது. ஆசிரியருடைய கருத்துக்களும் நடையும் மெய்ப்பாடுகளும் இப் படலத்தில் அத்தனை உரம்பெற்றிருக்கின்றன. எவரோ பாடி இடைப்பெய்து வைத்தது இப்படலம் என்று கூறுவாரும் இக்காலத்துளர். நாகபாசப் படலத்தைப்பற்றி இன்னும் எவரும் இங்ஙனம் கூற எழவில்லை.

ஸந்யாசியாக வந்த இராவணன் சீதையை ஒரு கையால் கூந்தலையும் ஒரு கையால் தொடைகளையும்

கம்பநாடு இவருடைய முன்னோர்களது ஜன்மதேச மாகையால், இவர் கம்பர் கம்பநாடர் என்று பெயர் பெற்றிருக்கலாம். இவர் இராமபக்தியிலும் ஆழ்வார் பக்தியிலும் ஆழ்ந்து ஈடுபட்டிருப்பதைக் கண்டு வியந்த ஸ்ரீரங்கத்து வித்துவாமிசர்கள் இவரைக் கம்பநாட் டாழ்வான் எனப் புகழ்ந்தனர். இவரைப் புகழ்ந்து பாடிய தனியன்களில் 'கம்பநா டுடைய வள்ளல்' என் றும் 'கம்பநாட் டாழ்வான் கவி' என்றும் வருவன இதற்குப் பொருந்தும்.

தஞ்சையில் இவர் திருவழுந்தூரில் பிறந்தவர் என் பதும் வாழ்ந்தவர் என்பதும், 'மன்றே புகழுந் திரு வழுந்தூர் வள்ளல்' எனச் சடகோப ரந்தாதியிலும், 'சீரணி சோழநாட்டுத் திருவழுந்தூரில் வாழ்வோன்' என இராமாயணத் தனியன் ஒன்றிலும் வருவனவற் றால் அறியப்படும். இப்பொழுதும் திருவழுந்தூரிலே கம்பர் மேடு என்று ஒரு மனை வழங்கிவருவதும் இதனை வலியுறுத்துகின்றது. கம்பர் வீட்டில் நாடோறும் புது மட்கலங்களில் அடிசில் அடுவது வழக்கம்: அட்டுக் கழித்த கலங்களை ஒரு கொல்லையில் எறிந்துவந்தனர்: இங்ஙனம் உடைதலுற்ற குயக்கலங்கள் நாளடைவில் மேடிட்டன. கம்பருடைய வாழ்க்கைக்கு அறிகுறி யான இந்த மேட்டை எவரும் கைக்கொள்ளாமல் விட்டனர் என அவ்வூரினர் கூறிவருகின்றனர்.

தீ:வி லேணி தொருபக லும்சிலை
வீரன் மேனியை மானுமிவ் வீங்குநீர்
நார நாண்மலர்ப் பொய்கையை நண்ணுவென்
சோரு மாருயிர் காக்குந் துணிவினுல்

என்றும் உரைத்ததாகவும், திருவடி தொழுத படலத்தில் சீராமனிடத்தில் அநுமன்,

வேலையுள் இலங்கை யென்னும் விரிநகர் ஒருசார் விண்டோய்
காலையு மாலை தானும் இல்லதோர் கனகக் கற்பச்
சோலையங் கதனின் உம்பி புல்லினுல் தொடுத்த தூய
சாலையின் இருந்தாள் ஐய தவஞ்செய்த தவமாம் தையல்.

மண்ணொடுங் கொண்டு போனன் வானுயர் கற்பி னுடன்
புண்ணிய மேனி தீண்ட அஞ்சுவான் உலகம் பூத்த
கண்ணகன் கமலத் தண்ணல் கருத்திலாட் டொடுதல் கண்ணின்
எண்ணருங் கூருய் மாய்தி என்றதோர் மொழியுண் டென்பான்

என்றுரைத்ததாகவும் உரைத்து, இங்ஙனம் தானுட்டித் தனது நிறுத்தலாக இந்த விஷயத்தை உறுதிப்படுத்தியிருப்பதைக் காண்க.

கம்பராமாயணத்தை வாசித்த வடநூல் வல்லவராகிய அந்தணர் சிலர், கம்பர் சில இடங்களில் வான்மீகியைக் காட்டிலும் விஞ்சியிருப்பதாகக் கூறி, சித்ரகூட வர்ணனை வாலிவதை முதலிய விடங்களில் அதிசயம் அடைகின்றனர்.

கம்பருடைய கவிகதி. — "ஒட்டக்கூத்தர் கடருவு படலம் பாடிவருகின்றனர்; நீர் எம்மாத்திரம் பாடினீர்?" எனக்கேட்ட அரசனையும் பிறரையும் நோக்கிக் கம்பர், "நாம் சேதுபந்தனப் படலம் பாடாநின்றேம்"

எனக் கூறினதாகக் கூறும் கன்னபரம்பரையான வரலாறும், அதன்மேல் இராமாயணத்தை இரண்டு வாரத்தில் தினம் எழுநூறு விருத்தமாகப் பாடி முடித்தனர் எனக் கூறும் வரலாறும், உண்மையென்றே தோற்றுகின்றன. இராமாயணத்தில் எந்த ஏட்டைத் தள்ளிப் பார்த்தாலும், கவிகதி தட்டுத்தடையின்றி நீரோட்டமே போலச் செல்வது கட்புலனுகும் யாதொரு வரியையும் வருந்திப் பாடினதான குறி யாதொன்றும் தோன்றுவதில்லை. உலகியலை நன்கறிந்தவராய்க் கல்விக் களஞ்சியமாய்க் கவிபாடுந் திறம் முதிர்ந்தவரான கம்பர் அஸாதாரணமான காவ்யத்தை அநாயாஸமாகவே செய்து முடித்தார். பாஷைநடையின் ஸூக்ஷ்மங்களையும் சொல்லாற்றலையும் பொருளாற்றலையும் நன்குணர்ந்தவராதலின், இவர் கவிபாடாநிற்கையில் கருத்தொன்றனையே கருதியிருப்பர். சொற்கள் அதற்கியையத் தாமே வந்தியையும். "சேதுபந்தனம் வரையில் பாடிவிட்டீரா? அப்படியானல் அந்தப் படலத்தில் ஒரு கவியைச் சொல்லிக் காணீர்" என்ற உடனே,

குமுத னிட்ட குலவரை கூத்தரில்
திமித மிட்டுத் திரியுந் திரைகடல்
துமித மூர்புக வானவர் துள்ளினர்
அமுத மின்னு மெழுமெனு மாசையால்

என்று அப்பொழுதே பாடினுரென்பதற்கு வேறு சான்று வேண்டா: அவர் முதனுள் பாடிய ஆற்றுப் படலத்தில்,

மலையெடுத்து மரங்கள் பறித்துமா
டிலைமுதற்பொருள் யாவையு மேந்தலால்
அலைகடற்றலை யன்றணை வேண்டிய
நிலையுடைக்கவி நீத்தமர் நீத்தமே

என்று பாடிய விருத்தமே அதற்கு இன்றளவும் சான்று பகர்கின்றது. நேற்றுப் பாடிய சேதுபந்தனப் படலத்தின் செய்தி, இன்று ஆற்றை வர்ணிக்கும்போது கற்பனையாக அமைந்ததன்றோ? ஆகவே இவர் "எழுந்த நாயிறு விழுவதன்முன் கவி பாடின தெழுநூறே" என்பதில் ஐயமில்லை.

அவர் இயற்றிய ஏனை நூல்கள்.—கம்பநாடருடைய கவித்திற மெல்லாம் இராமாயணத்தில் முற்றும் ஏறிநின்றது. அத்திறம் கட்புலனாகின்ற மற்ற நூல் சடகோபரந்தாதி ஒன்றே. ஸரஸ்வதி யந்தாதியைச் சிறுபிராயத்தில் பாடினார் போலும். அவ்வந்தாதியில் ஆசிரியரது முதிர்ந்த திறம் கட்புலனாவதின்று. குமரகுருபரர் பாடிய சகலகலாவல்லிமாலையின் சிறப்புத்தானும் கம்பர் பாடிய ஸரஸ்வதியந்தாதியில் த்வனிப்பதில்லை. ஆயினும், ஸரஸ்வதியை உபாசித்துவந்தால் வாக்குவளம் உண்டாகுமென்று அவர் நம்பினவரே யாவர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்
அல்லும் பகலு மநவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

இலக்குமி யந்தாதி என்பதொன்று இவர் பாடினதாகக் கூறுகின்றனர். இதில் கம்பர் வாக்கு ஓரடியளவாகத்

தானும் இலதென்றே காண்கிறது. அவ்வந்தாதியின் 15—வது செய்யுளைக் கேளுங்கள்:—

தாயக மேயெவ் வுலகுக்கும் யார்க்கும் தயாநிதியாம்
நாயக மேநின் சரணும் புயங்களை நாடுமன்பர்
தூயக மேவிளங் கும்விளக் காயவட் டேயருள்கூர்
சாயக மேயன்ன கண்ணியம் போருகஞ் சார்பவளே.

சரஸ்வதி யந்தாதியின் 15—வது செய்யுளையுங் கேளுங்கள்:—

நாயக மான மலரக மாவது ஞானவின்பச்
சேயக மான மலரக மானதுந் தீவினையா
லேயக மாறி விடுமக மாவது மெவ்வுயிர்க்குந்
தாயக மாவதும் தாதார் சுவேத சரோருகமே.

இவ்விரண்டுடனே சடகோபாந்தாதியைத் தட்டித்திறந்ததொரு பக்கத்தில் கண்ணிற்கு முதலிலே காணப்படுகின்றதொரு செய்யுளை ஒப்பிட்டுப் பாருங்கள். இதோ 45—வது செய்யுள்.

சேரா தனவுள வோபெருஞ் செல்வர்க்கு வேதஞ் செப்பும்
பேரா யிரந்திண் பெரும்புய மாயிரம் பெய்துளவத்
தாரார் முடியா யிரங்குரு கூர்ச்சட கோபன்சொன்ன
ஆரா வமுதக் கவியா யிரமவ் வரியினுக்கே.

இதன் வாக்கும் போக்கும் முன்காட்டிய செய்யுளின் வாக்குப் போக்குகளைக்காட்டிலும் சிறந்ததென்பதை எவர்தான் அன்றெனக் கூறுவர்? சோனுடைய ஸமஸ்தானக் கவிராயர்கள் கம்பரிடங்கொண்ட மாற்சரியத்தால் அவரை அம்பட்டனுடைய பங்காளியெனக் கற்பித்த காலையில் பாடினதாகும் ஸரஸ்வதியந்தாதி, அவளரு

ளுடனே அவள் பாதச்சிலம்பு பெறற் பொருட்டெனக் கூறுவாருமுளர். ப்ரம்ஹராக்ஷஸனுடைய அருள்பெற்ற போது பாடினரெனக் கூறுவது முண்டென முன்னமே கூறினே மன்றே. இவ்விருதிறவர் கூற்றையும் மெய்ப் பிக்கலான சான்று யாதொன்றும் அந்நூலகத்துக் காண் கின்றிலது. ஏரெழுபதின் எழுவாயை முன்னரே குறித் திருக்கிறேம். எப்படியும் இந்நூல் கம்பர் பேரும் புக ழும் எய்தின பின்னரே பாடியதெனக் காண்கின்றது. செம்பொற் சிலையெழுபது வெகுவாய் ஏரெழுபதின் போக்கே போக்காக அமைந்துகிடப்பினும், அதனை இயற்றினர் கம்பரென்றே துணிந்து சொல்வதற்கான ஆதாரம் இலது காஞ்சிப்புராணம்—காஞ்சிப்பிள்ளைத் தமிழ்—சோழக்குறவஞ்சி — திருக்கைவழக்கம் என்னும் நூல்களும் கம்பர் இயற்றினரெனச் சிலர் கூறுகின்றனர். இவற்றில் திருக்கை வழக்கம் தவிர மற்றவைகள் அச் சிற்காணமையால் எவர்க்கும் கிடைத்த லரிதா யிராநின் றன. அச்சிட்ட ப்ரதிகளில் தானும் திருக்கைவழக்கம் ப்ரதிக்கு ப்ரதி மாறுபடுதலான், கம்பர் பாடின அடிகள் இன்னின்னவையே எனத் துணிந்துகொள்ளக் கூட வில்லை. கம்பர் ஓரகராதியும் இராமாயண வசனமும் எழுதினரெனச் சிலர் கூறுகின்றனர்.

கம்பருடைய குணவிசேஷம். — யாதொரு கவியின் நூலைக் கற்றுவைத்தும், அக்கவியை இன்னதன்மைய ரென அறியமாட்டாதவன், தான் நேரில் கண்ட யா

தொரு கவியைத் தானும் இன்னதன்மையரென அறிவதிலன் என்றொரு இங்க்லிஷ் ஆசிரியர் இயம்புகின்றனர். இராமாயணத்தால் கம்பர் இன்னதன்மையரென அறிதலாகுமோ என்று ஆராய்தல்வேண்டும். அயோத்திமாநகரத்தை

ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகம் முதற்றிண் பணை போக்கி யருந்த வத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே

என வர்ணித்திருத்தலால், இவர் கல்வி கேள்விகளின் அருமையைப் பாராட்டினவரென்பது பெறப்படும். ஆயினும், அக்காலத்துக் கணக்காயர் கல்வி கற்பிக்கும் முறையைக் கம்பர் வியந்தவ ரல்லரென்பது

கல்வியிற் றிகழ்கணக் காயர் கம்பலைப்
பல்விதச் சிறுஅரெனப் பகர்வ பல்லரி
செல்விடத் தல்லதொன் றுரைத்தல் செய்கலா
நல்லறி வாளரி னவிந்த நாவெலாம்

என்ற கார்கால வர்ணனையால் பெறப்படும்.

பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே

என்றதனால் இவர் பெண்கல்வியின் நன்மையை அக்காலத்திலேதானே உணர்ந்தவரென்பது தேற்றம்.

துன்புளதெனினன்றோசுகமுளது

எனக் கூறினாராதலின் இவர் வறுமையிற் செம்மையைக் கண்டவரென்பதும்,

> யாவையாதுமிலார்க்கியையாதவே

என்றதனால் வறுமையின் கொடுமையைக் கண்டறிந்தவரென்பதும் தெளிவாகின்றன. ஆண்பாலினரைக் காட்டில் பெண்பாலினர் காம மிக்கவ ரல்லர் என

> மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனமென்ப தொன்றே யன்றே

என்ற அடியில் வற்புறுத்தினாரேனும், ஆண்பாலினர் கேடெய்துவது பெண்பாலினர் தரும் காம வின்பத்தால் என

> தூம கேது வெனப்புவித் தோன்றிய
> வாம மேகலை மங்கைய ரால்வரும்
> காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்
> நாம மில்லை நரகமு மில்லையே

என்ற விருத்தத்திலே கூறினர். இவ்வுண்மையைப் பின்னும்,

> மங்கையர் பொருட்டா லெய்து மாந்தர்க்கு மரண மென்றல்
> சங்கையின் றுணர்தி வாலி செய்கையாற் சாலு மின்னும்
> அங்கவர் திறத்தி னாலே யல்லலும் பழியு மெய்தல்
> எங்களிற் காண்டி யன்றே இதற்குவே றேதி யாதோ

எனவும் வற்புறுத்தினர். சித்ரகூடப் பருவதம் முதலியவற்றின் வர்ணனையால், இவர் எல்லாக் காட்சிகளையும் நேரில் கண்டநுபவித்தவர் என்பது நன்கறியப்படும். கற்பனாசக்தியால் மாத்ரம் அவைகளை நன்கு வர்ணிக்க இயலாது என்பது அவ்வர்ணனைகளைப் படித்தவர்கட்கு

மெய்ப்படும். சடையப்ப முதலியாரையும் அவருடன் பிறந்தாரான கண்ணனையும், சராமமரையும் இராமா யணத்தில் அங்கங்கே புகழ்ந்திருத்தலானும்,

சிதைவகல் சாதற் றுயைத் தந்தையைக் குருவைத் தெய்வ
பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கு முண்டா மாற்றலா மாற்றல் மாயா
உதவிகொன் றார்க்கென் றேனு மொழிக்கலா முபாய முண்டோ

எனப் பாடியிருத்தலானும், இவர் மிகவும் செய்ந்நன்றி யறிதலுடையவர் என்பது தேற்றம். கள்ளுண்டலைக் கடிந்து சினந்தவரென்பது பின்வரும் செய்யுளால் போதரும்:—

வஞ்சமுங் களவும் பொய்யு மயக்கமு மரபில் கோட்டும்
தஞ்சமென் றாரை நீக்குந் தன்மையுங் களிப்புந் தாக்கும்
கஞ்சமெல் லணங்குந் தீருங் கள்ளினை லருந்தி னாரை
நஞ்சமுங் கொல்வ தல்லா னரகினை நல்கா தன்றே.

தமிழையும் தமிழ் நாட்டையும் குறிக்க நேரிடுகின்ற இடங்களில் அதிக உற்சாகமுடையவராகக் காண்கின் றனர்.

கம்பர் சைவரோ வைணவரோ என்பதைத் துணி கின்றதில் இருதலைக் கொள்ளியிடை எறும்பேபோல இடர்ப்பட வேண்டுவதா யிருக்கின்றது. கம்பர் பிள் ளையின் பெயர் அம்பிகாபதி என்பது உலகப்ரஸித்தம். ஏரெழுபதில் விநாயக வணக்கம் வைத்திருக்கின்றது. இராமாயணத்தில் சிவபெருமானைக் குறிக்கின்ற தொ டர்கள் சிறப்பாகவே அமைந்திருக்கின்றன. சில ப்ரதி

களில் "ஆதியந்த மரியென யாவையும்," என்றும், சில வற்றில் "ஆதியந்தம் அரியன யாவையும்" என்றும் பாடபேதம் உண்டு. ஏனைச் சிறப்புப்பாயிரச் செய்யுள் கள் பொதுப்படவே தெய்வவணக்கம் கூறுகின்றன. ஈதெல்லாம் இங்ஙன மிருக்கத் திருக்கைவழக்கம் ஸ்ரீ ஆறுமுகநாவலர் பதிப்பில்,

பண்ணமைந்த

வேதமொரு நான்கினையு மிக்கதமிழ் நாலடியால்
ஓதியுரைத் தேகருணை யோங்குங்கை

என வருவது, தொழுவூர் ஸ்ரீ வேலாயுதமுதலியார் பதிப்பில் விடுபட்டிருக்கிறது. இவ்வடிகள் குறிப்பது சடகோபரைப் போலும். இராமாயணத்தில் திருவவ தாரப் படலத்தில்

என்னையா ளுடைய வையன்

என்பது பெரிய திருவடியான கருடாழ்வாரைக் குறிக் கின்றது. இதில் ப்ரதிபேதம் இல்லை. கடிமணப் பட லத்தில்

என்றுநான் முகன்முதல் யாரும் யாரையும்
நின்றபே ரிருளினை நீக்கி நீணெறி
சென்றுமீ ளாக்குறி சேரச் சேர்த்திடு
தன்திரு நாமத்தைத் தானுஞ் சாத்தியே

என்றும், சம்புமாலி வதைப் படலத்தில்

ஐயனு மமைந்து நின்று ழியா னளவி னும்ம
செய்சுடர் விளக்கிற் றேன்று நெற்றியே நெற்றியாக

என்றும், பரதன் சூள்செய்கின்ற இடத்தில்

தழைத்ததண் துளவினேன் தலைவன் அல்லனென்
றழைத்தவன்

என்றும், விராதன் துதியில்

பனிநின்ற பெரும்பிறவிக் கடல்கடக்கும் படிபற்றி
நனிநின்ற சமயத்தோ ரெல்லாரு நன்றென்னத்
தனிநின்ற தத்துவத்தின் தகைமூர்த்தி நீயாகில்
இனிநின்ற முதற்றேவர் என்கொண்டென் செய்வாரே

என்றும்,

மழுவாளிக் கன்றளித்த
ஐயத்தால் சிறிதையம் தவிர்ந்தாரு முளரையா

என்றும், சரபங்கர் பிறப்புநீங்கு படலத்தில் இந்திரன் ஸ்ரீராமனைத் துதிசெய்வதில்,

எல்லை வலயங்கள் நின்னுழையென் றந்நாள்
எரியோனைத் தீண்டி எழுவர் எனநின்ற
தொல்லை முதல்முனிவர் சூளுற்ற போதே
தொகைநின்ற ஐயம் துடைத்திலையோ எந்தாய்

என்றும், கவந்தப் படலத்தில்

மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ

என்றும், இன்னும் பலவிடங்களிலும் விஷ்ணுவுக்குப் பாரம்யம் கற்பித்திருக்கிறார். இங்கே எடுத்துக் காட்டியன வெல்லாம் சைவருக்கு நிஷ்டூரம் உண்டாகாமல், கம்பர் வேண்டுமானால் தாமே தவிர்த்திருக்கக்கூடிய பாகங்களே. நாலாயிர ப்ரபந்த வ்யாக்யாநங்கள் கம்பருடைய ப்ரயோகங்களில் சிலவற்றை எடுத்துக் காட்டியிருக்கின்றன. இராமாநுஜ நூற்றந்தாதி 43-வது பாசுரத்தின் வ்யாக்யாநத்தில் "ஆழ்வார் நூற்றந்தாதி

யிலும், 'என்முடி யாதெனக் கியாதே யரியது' என்று இப்படி ப்ரயோகிக்கப்பட்டது. ஆகையாலே மஹா கவி ப்ரயோகங்கள் இப்படி வரக்கடவதாக இருக்கும்" என மணவாளமாமுனிகள் காட்டியிருப்பது காண்க. திருவாய்மொழி 2 – பத்து 1 – திருவாய்மொழி 3 – பாட்டின் ஈடு, "ராவண பயத்தாலே முன்பு அரைவயிருக ஜீவித்த அக்நி வயிறு நிறைய உண்டு ஜீவிக்கப்பெற்றதாயிற்று. பெருமாளை அண்டை கொண்ட பலத்தாலே: 'செந்தீயுண்டு தேக்கிட்டதே' என்னக் கடவதிறே" என்றும், ஜீயர் அரும்பதம் "'வயிறு நிறைய உண்டு' என்றதுக்கு ஸம்வாதம் (செந்தீயித்யாதி) கம்பநாடகத்திலே" என்றும் உரைக்கின்றன. இங்கே காட்டிய மேற்கோள் இலங்கையெரியூட்டிய படலத்தில்

என்று கொல்குரங் கன்னதிவ் வலியுள திலங்கை
நின்று வெந்துமா நீறெழு கின்றது நெருப்புத்
தின்று தேக்கிடு கின்றது தேவர்கள் சிரிப்பார்
நன்று நன்றுபோர் வலியென விராவண னக்கான்

என்ற 46–விருத்தத்தினின்றும் கொண்டது. 5–பத்து 3 – திருவாய்மொழி 7 – பாசுரத்தின் அரும் பதத்தில் ஜீயர், "'தலைமகள் தலையாலே வணங்கும்' என்றதுக்கு 'தீவினை தீர்வரம் வேண்டினுள் தொழுதென்று விளம்புவாய்' என்று கம்பனும், 'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்' என்று வள்ளுவனும் சொன்னத்தை ஸம்வாதமாகக் கண்டுகொள்வது" என்

கிறார். கம்பர் இராமாயணம் பாடுமுன்னர் சைவரா யிருந்தவர் பின் வைணவராயினார் எனச் சில தமிழ்ப் புலவர் கூறிவருகின்றனர்.

அரனதிகன் உலகளந்த அரியதிகன் எனவுரைக்கும் அறிவிலார்க்குப்
பரகதிசென் றடைவரிய பரிசேபோல் புகலரிய பண்பிற்றுமால்
சுரநதியின் அயலதுவான் தொடுகுடுமிச் சுடர்த்தொகைய தொழு
[வோர்க்கெல்லாம்
வரனதிகம் தருந்தகைய தருந்தகியா நெடுமலையை வணங்கியப்பால்

என்ற விசுவாமித்ர ஸ்ருஷ்டியான வெள்ளிப்பாட்டைக் காட்டிக் கம்பரை வேறு கூறுவாருமுளர்.

ஆயினும் ஸ்ரீரங்கத்திலே கம்பர் கட்டுவித்த மண்ட பத்திலே சக்ரவர்த்திக்குரிய ஆடம்பரங்களுடனே கம்ப ரைப்போல் சிலா விக்ரஹம் இயற்றிவைத்திருப்பத னால், இராமாயணத்தை

கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றினானே

என்பதூஉம், அங்கே கவிச்சக்ரவர்த்திப் பட்டம் அளிக்கப்பெற்றா ரென்பதூஉம் உண்மையாவது மன்றி, இவர் வைணவர் என்பதை வற்புறுத்துகின்றன. இவரை நாட்டரசன் கோட்டையில் வைணவ ஸம்ப்ரதாயத் தின்படி ஸமாதி செய்திருக்கின்றது. இதனை இன்றும் காணலாம்.

முடிவு.—இராமாயணம் பாடி முடிந்த பிறகு கம்பர் கவிதா ஸந்நதத்தை இழந்தனரென்றும், தாம் பாடின பாடல்களைப் பிறர் படிக்கும்போது அவை தாம்

பாடினவை என்பதறியாமல் அதிக ஊக்கத்துடன் கேட்டு ஆநந்திப்பரென்றும் கூறிவருகின்றனர். "கல்வியிற் பெரியவர் கம்பர்" என ஐந்தாம் வேற்றுமை ஏதுப்பொருளுக்குக் காட்டப்படும் உதாரணத்தாலும், யாதொரு இயந்திர முதலியவற்றின் கூறுபாட்டை அறியாது அதிசயிக்கின்றவர்கள் "இதென்ன கம்பஸூத்ரமாயிருக்கிறதே" என வழங்கும் வழக்காற்றாலும், "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்ற பழமொழியாலும், விரிவாக எழுதியிருக்கின்ற யாதொன்றைக் காண்கின்றவர்கள் "இதென்ன கம்பராமாயணமாக இருக்கிறதே" என்பதனாலும், கம்பரென்னும் திருநாமம் எக்காலத்தும் மறைவதின்றி நிலைபெறுவதாயிற்று.

# அநுபந்தம்

## கம்பராமாயணம் மொழிபெயர்ப்பான வழிநூல்

நாரணன் விளையாட்டெல்லாம் நாரதமுனிவன் கூற
ஆரணக் கவிதைசெய்தான் அறிந்த வான்மீகியென்பான்.
சீரணி சோழநாட்டுத் திருவழுந்தூருள் வாழ்வோன்
காரணக்கொடையான் கம்பன் தமிழினாற் கவிசெய்தானே.

தேவபாடையி னிக்கதை செய்தவர்
மூவரானவர் தம்முளு முந்திய
நாவினா ருரையின்படி நான் தமிழ்ப்
பாவினால் இதுணர்த்திய பண்பரோ.

## காண்ட முதலியவற்றின் தொகை.

கரைபெறு காண்டமேழு கதைக ளாயிரத்தெண்ணூறு
பரசமர் பதினான்கென் படல நூற்றிருபத்தெட்டாம்
உரைதரு விருத்தம் பன்னீராயிரத் தொருபத்தாறு
வரமிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணூற்றாறே.

## நாளொன்றுக்கு எழுநூறு கவிவீதம் பாடியது.

கழுந்தராயுன கழல்பணியாதவர் கதிர்மணி முடிமீதே
அழுந்த வாளிகள் தொடுசிலை ராகவ அபிநவ கவிநாதன்
விழுந்தநாயிற தெழுவதன்முன் மறைவேதியருட னாராய்ந்
தெழுந்தநாயிறு விழுவதன்முன் கவிபாடின தெழுநூறே.

## இராமாயணம் பாடின இடமும் அரங்கேறிய இடமும்

நடையினின் றுயர்நாயகன் தோற்றத்தின்
இடைநிகழ்ந்த இராமாவதாரப் பேர்த்
தொடைநிரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல்லூர் வயின் தந்ததே.

எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழின்மேல் சடையன்வாழ்வு
நண்ணிய வெண்ணெய்நல்லூர் தன்னிலே கம்பநாடன்
புண்ணிய இராமகாதை பங்குனி அத்தநாளில்
கண்ணிய அரங்கர்முன்னே கவியரங் கேற்றினானே.

## கம்பர் கவிச்சக்கரவர்த்தி என்னும் பட்டப்பெயர் பெற்றது.

அம்பிலே சிலையைநாட்டி அமரர்க்கன் றமுதம் ஈந்த
தம்பிரான் என்னத் தானும் தமிழிலே தாலை நாட்டிக்
கம்ப நாடுடைய கோமான் கவிச்சக்ரவர்த்தி பார்மேல்
நம்பு பாமாலையாலே நரர்க்குமின் றமுதம் ஈந்தான்.

## கம்பருடைய கவிநயம்.

இம்பர்நாட்டிற் செல்வமெல்லாம் எய்தி அரசோடிருந்தாலும்
உம்பர்நாட்டிற் கற்பகக்கா ஓங்குநீழல் இருந்தாலும்
செம்பொன்மேரு வனைய புயத்திறல்சேர் இராமன் திருக்கதையில்
கம்பநாடன் கவிதையிற்போல் கற்றோர்க்கிதயம் களியாதே.

தராதலத்தி னுள்ள தமிழ்க்குற்ற மெல்லாம்
அராவும் அரமாயிற் றன்றே—இராவணன்மேல்
அம்புநாட் டாழ்வா னடிபணியும் ஆதித்தன்
கம்பநாட் டாழ்வான் கவி.

## திருக்குறளின்பால் கம்பர் பாராட்டிய கௌரவம்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாரும்
தொழுதுண்டு பின்செல்வார் என்றேயித் தொல்லுலகில்
எழுதுண்ட மறைசொன்னல் இவருடனே இயலுமிது
பழுதுண்டோ கடல்சூழ்ந்த பாரிடத்திற் பிறந்தோர்க்கே.

## கம்பர் மரணகாலத்தில் பாடியது.

ஆன்பாலுந் தேனும் அரம்பைமுதல் முக்கனியும்
தேம்பாய உண்டு தெவிட்டுமனம்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா கம்பன்
இறக்கும்போ தேனும் இனி.

## கம்பர் இறந்தது கேட்டுச் சோழன் அவையிலுள்ள புலவர் பாடிய கையறும்.

*இன்றோநம் கம்பன் இறந்தநாள் இப்புவியில்*
*இன்றோநம் புன்கவிகட் கேற்றநாள்—இன்றோதான்*
*பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருப்ப*
*நாமடந்தை நூல்வாங்கு நாள்.*

## கம்பன் போனவழி கண்டு கழித்தது.

கம்பர் சீவவந்தராயிருந்த காலத்தில் எப்பொழுதாவது எவ்விடத்திற்காயினும் போகவரச் சம்பவித்தால், முன்போலத் தனியே கால்நடையாய்ப் போகாமல், கருணாகரபாண்டியன் கொடுத்த தந்தப்பல்லக்கின்மேல் ஏறி, குலோத்துங்கசோழன் கொடுத்த சுவேதசத்திரம் கவிக்க, சாமரம்வீச, திருச்சின்னம் ஊத, மற்றும் பற்பல விருதுகள் பிடிக்க, குடகதேசாதிபதி கொடுத்த யானைகளும் மாறுவாடி தேசத்தரசன் கொடுத்த ஒட்டகங்களும், சிந்து தேசத்திறைவன் கொடுத்த குதிரைகளும் ஆந்திரதேசாதிபதி கொடுத்த கண்டவாள எருதுகளும் பெருங்கூட்டமாக ஒரு ராஜாவின் தண்டுவருவதுபோல் தம்மைச் சூழ்ந்து வரும்படி பிரயாணம் பண்ணுவதுண்டு. இந்தக் கூட்டம் போகிற வருகிற மார்க்கங்களில் இவைகளுக்குவேண்டிய ஆகாரங்களை அங்கங்குள்ள சோலைகள் தோப்புகள் கொல்லைகள் கழனிகளில் வேண்டியமட்டும் பெற்றுக்கொள்வதற்குத் தடையில்லை. அந்த நஷ்டத்தை வருஷவாரியில் துரைத்தனத்தார் தங்களுக்கு வரும் மேல்வாரத்தில் "கம்பன் போன வழி கண்டு கழித்தது இவ்வளவு" என்று கழித்துக் குடிகளுக்குக் கொடுப்பது பெருவழக்கமாயிருந்தது.

—விநோதரசமஞ்சரி

மாடம்பாக்கம் கிருஷ்ணசாமி முதலியார் 1861-ஆ அச்சிட்ட பாலகாண்ட வுரையின் அவையடக்கத்தில் வருவது.

*உம்பர்நாட்டாரும் உரைசெறிபுகழ்மைசால்*
*கம்பநாட்டாழ்வான் கழறிராமாயணம்*
*படிகோலோச்சும் பஞ்சவன்வளர்த்த*
*வடிதமிழ்க்குரைகடல் வாயமுதென்கோ?*
*மறைக்கிழவோன்றவ மாணநாப்பொலியும்*
*நறைக்குழல்முடிபுனை நறுமலரென்கோ?*

தொல்லியலகத்தியம் தொல்காப்பியமெனச்
சொல்லிபலேந்தின் துகளில்காட்டென்கோ?
ஆய்தொறும் இறும்பூ தனைவவிழுச்சுவை
மாய்வின்றுதவலின் வான்றருவென்கோ?
திராவிடம்அரில்தபச் செப்பம்பெறுமா
றராவிடக்கூர்வாய் அரமிஃதென்கோ?
வெம்பவவலையொரீஇ விரஜையங்கரையின்
உம்பர்வீடுய்க்கும் ஒருபுணையென்கோ?
எனவறம்கரைநா இருங்கவிச்செல்வர்
மனமுறக்கிளக்கும் மாண்பிற்றெனகனி,
* * * மன்னிய அறமுதல்
பாகுபாடுணர்த்தும் பண்புடைத்தாகி,
வாகினின்றோசை மரீஇப்பல்வனப்புச்
செறிந்து, சில்லெழுத்திற் றிட்பநுட்பங்கள்
நிறைந்தின்னனதழீஇ நெறிப்படஒழுகுபு,
பேரியல்பெருங்காப் பியமிதின்ஊங்கு
சீருறஉளதெனச் செப்பவல்லுநர்முயற்
கோடுதுன்னூசிக் குடர்வான்பூக்கண்
கூடுறக்காட்டும் கொள்கையரம்மா.
ஆழமுடைமையின் சூழ்கடல்வையம்
கம்பசூத்திரம் அம்பரத்தவர்க்கும்
தெரிதலரிதென்று செப்புநெடுமொழி
பொருள்.................................

மேற்படி பாலகாண்ட உரைச் சிறப்புப்பாயிரம் அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் சொல்லியதில் வருவது.

பொன்னிசூழ்புனலு டென்னும்கன்னிதன்
நன்னுதற்பொட்டென மன்னிப்பொலிந்த
திருவழுந்தூரில் பொருவிறந்தமர்ந்தோன்,
புவிச்சக்ரவர்த்திகள் போற்றிப்பழிச்சும்
கவிச்சக்ரவர்த்தியாம் கம்பநாட்டாழ்வான்,
வாணிவரத்தால் ஏணுறுதமிழில்
அகத்தியம்தொல்காப் பியம்அவிநயமுதல்
மகத்துவம்திகழும் இலக்கணவழியே,

ஏந்துசங்கத் தியாப்புமிக்குட்க,
ஆய்ந்துசம்பிர தாயம்அளைஇ,
அற்புதமருவு கற்பனைகொழிப்ப,
முறையுறக்கௌட நெறிநணிவிராஅய்த்
திருத்தகுசொற்சுவை பொருட்சுவைசெறிய,
ஓசைபெற்றுழும் உடைத்தாய்,ஆசிகந்
தழகுறப்பல்வகைச் சந்தங்கெழீஇய
யாப்பிற்புனைந்துரை இராமாயணப்பெருங்
காப்பியம்................................

அந்தகக் கவி வீரராகவ முதலியார் இராமாயணப் போர் ஒப்படி செய்தது.

அந்தகக்கவி வீரராகவ முதலியார், ஈழநாட்டரசனுகிய பரராசசிங்கன் சமுகத்தில் தாமியற்றிய பிரபந்தங்களில் சிலவற்றை அரங்கேற்றிய பின்னர், ஒருநாள் அரசன் அவரை நோக்கி "ஐயா, தாங்கள் கம்பராமாயணம் ஒருநாள் பிரசங்கம் செய்யவேண்டும்" என்று வேண்டினுன். அவர் "கம்பராமாயணம் என்னும் ஒருநூல் உளதோ?" என்றுர். அரசன் அங்குள்ள புலவர்களில் ஒருவரை அந்நூலினைக் கொணரும்படி செய்து கவிராயருடைய சீடரிடம் கொடுத்து அதனைக் கவிராயர்க்குத் தெரிவித்தான். அவர் அதினின்றும் சில பாடல்களை எடுத்துப் படிக்கச் சொல்லி அனைவரும் ஆனந்த பரவசமாம்படி பிரசங்கஞ்செய்து நிறுத்த அரசன் அரண்மனை சென்றுன்.

அப்பால் கம்பராமாயண நூலினின்றும் ஏடுகளை உருவி, அங்கிருந்த புலவர் பலரிடத்தும் பற்பல ஏடுகளைக்கொடுத்து வாசிக்கச்சொல்லிப் படித்து முடிந்ததும் அவற்றைக் கட்டிவைத்துப் போம்படிசெய்தார். மறுநாள் காலையில் அரசன் பட்டிமண்டபத்துக் கவிராயர் வழக்கப்படி சென்று, மனக்கிலேசத்துடன் இருப்பார்போன்று தமது முகக்குறிப்பால் அரசனுக்குத் தெரிவித்தார்.

அதுகண்ட அரசன், "ஐயா, இளைப்பும் களைப்பு மேலிட்டிருப்பதாகக் காண்கிறீர். காரணம் என்ன?" என்று கேட்டான். கவிராயர் "அரசே, நேற்றிரவெல்லாம் இராமாயணப்போர் ஒப்படிசெய்தேன். அதுவே காரணம்" என்றுர். அரசன் "அப்படியானுல், கண்டு முதல் எவ்வளவு?" என்று கேட்டான். அதற்கு அவர் "அடித்தது

பன்னீராயிரம். கைக்கெட்டியது நாலாயிரம். கல் இரண்டாயிரம்: பதர் ஆறாயிரம்'' என்று சொல்லி, கைக்கெட்டிய நாலாயிரத்தைப் பரராசசேகரன் பரமானந்தம் அடையும்படி விரித்து விளக்கினார். முடிவிலே அரசன்

இன்னங் கலைமகள் கைமீதிற் புத்தகமேந்தி யந்தப்
பொன் னம்புயப்பள்ளி புக்கிருப்பாள் என்னபுண்ணியமோ
கன்னன் சயந்தன் கவிவீரராகவன் கச்சியிலே
தன்னெஞ்ச மேடெனக் கற்றான் கனமுத்தமிழையுமே

என்று பாடினான்.

### கம்பர் சடகோபரந்தாதி பாடியதும் பாடிய காரணமும்.

தேவிற்சிறந்த திருமாற்குத்தக்க தெய்வக் கவிஞன்
பாவிற்சிறந்த திருவாய்மொழி பகர் பண்டிதனே
நாவிற்சிறந்த அம்மாறற்குத் தக்கநன் னாவலவன்
பூவிற்சிறந்த ஆழ்வான் கம்பநாட்டுப் புலமையனே.

நஞ்சடகோபனைப் பாடினையோ வென்று நம்பெருமாள்
விஞ்சியவாதரத்தாற் கேட்பக் கம்பன் விரைந்துரைத்த
செஞ்சொலந்தாதி கலித்துறைநூறும் தெரியும் வண்ணம்
நெஞ்சடியேற்கருள் வேதந் தமிழ்செய்த நின்மலனே.

மன்றேபுகழும் திருவழுந்தூர் வள்ளல், மாறனைமுன்
சென்றே மதுரகவிப்பெருமாள் தென்தமிழ்த் தொடையில்
ஒன்றேபதிகம் உரைத்தவன் பொன்னடி உற்றுநின்றான்
என்றே பதிகம் பதிகமதாக இசைத்தனனே.

## செந்தமிழ்ப் பத்திரிகையினின்றும் எடுத்த சில குறிப்புகள்.

### 1. கம்பர் சோழன்பால் சிறப்பெய்தியது.

கம்பரது கல்வியும் காட்சியுமே காசினிமுற்றும் மேம்படுத்துப் புகழ்ந்து பாராட்டுதலைச் சோழன் தெரிந்து அவரைத் தன்பால் அழைப்பித்து, தான் கேள்வியுற்றதினும் இவர் ஆயிரம் பங்கு அதிகமாகப் பல்லாற்றானும் சிறத்தலைக் கண்கூடாகக் கண்டு, அரசர்க்கொத்த வரிசை பலவளித்துக் கவிச்சக்ரவர்த்தியெனப் பட்டந்தந்து, அவ்வரி

சைக்கும் பெயர்க்கும் தக நாடொன்று நல்கி, தான் நல்கிய அந்நாட்டிற்கும் கம்பனாடு எனப் பெயர் வழங்குவித்து, இவரைப் பெரிதும் உயர்த்தினன்.

## 2. வாணியன் தாதன் வசையுரைத்தது.

இவர் இங்ஙனம் சிறந்து வாழும்போது, சோழன் தாதன் எனப் பெயரிய செக்கானொருவன் தமிழ்ப்புலமை யுடையனாய்த் தன் அவைக்களத் தெய்திப் பாடினனுக்கு ஊரும் பேரும் அளித்துக் காளம் முதலிய விருதுகளும் நல்கினன். அவ்வளவில் கம்பர் அரசனைநோக்கி: இவ்வாணியற்கு இத்தகை வரிசையளித் துயர்த்துதல் எம்போன்ற குலக்கவிகளைச் சிறுமைப்படுத்தலோ டொக்கும் என்றுரைத்தார். இதனைத் தாதன் கண்டு பொறானாய் அச்சோழன் முன்னே "கைம் மணிச் சீரன்றிச் சீரறியாக் கம்பநாடன் சொன்ன, மும்மணிக்கோவை முதற்சீர் பிழை" என்று வசைபாடினன். தாதன் சோழன்பாற் பெற்ற ஊர் தொண்டைநாட்டிலுள்ள கூவம் என்பதாகும்.

## 3. இராம கதையில் கம்பர் பாடிய பாகம்.

கம்பர் பாடியன ஆறு காண்டங்களே என்பதற்கியைய, அரச கேசரியார் தாமியற்றிய இரகுவம்மிசம் என்னும் செந்தமிழ்நூலில் ஸ்ரீராம மூர்த்தியின் திருவவதாரமே உரைத்து, "மற்றிவ் விராமகதையின் பூருவபாகம் முழுதையும் கடலிற் பெரிய தமிழ்க்கல்வியினையுடைய கம்பநாடர் நிகழ்ந்தவாறு உரைத்தாராதலால் அதனை ஈண்டு ஓதினேனில்லை; அவர் உரையாத அக்கதையின் உத்தரபாகமே யான் இனி ஓதப்புக்கேன்" என்னும் கருத்தினை வெளிபடுப்பாராய்

பொற்றாமரைமான் ஒழியாது பொலியுமார்ப
வெற்றுங்கு மேனி ரகுராம சரிதையாவும்
கற்றார் கலியிற் பெரிதாங் தமிழ்க் கம்பநாடன்
உற்றாங் குரைத்தான் உரையாதன ஓதுகிற்பாம்

என ஒரு பாடலைக்கூறி, அதன்பின்னே சீதை வனம் புகுதல் முதலிய உத்தரகாண்டக் கதைகளையே பல படலங்களால் பாடினார்.

## 4. காண்டம் படலம் முதலியவற்றின் தொகையில் வேறுபாடு.

"கரைபொரு காண்டமேழு" என்கிற செய்யுளிற் கணக்கிட்ட ஏழுகாண்டச் செய்யுட்டொகையினின்று உத்தரகாண்டச் செய்யுட்டொகையாகிய 1500 யும் கழித்து நோக்கின், மற்றை ஆறு காண்டங்

களுக்கும் உரிய செய்யுட்டொகை 10518 ஆகும். இக்காலத்து முதல் ஆறு காண்டங்கட்கும் உள்ள செய்யுட்டொகை அச்சுப்பிரதிகளில் 10587 ஏட்டுப்பிரதிகளில் 10725-ம் 10676-ம் ஆகப் பல வேறுவகைப்படுவது. ஆறு காண்டங்கட்கும் உள்ள படலத்தொகையும் இங்ஙனமே 113, 119, 128, 137 எனப் பலவாருகக் காணப்படுகின்றது. உத்தரகாண்டச் செய்யுட்டொகை 1500 என்பதில் பெரும்பான்மை வேறுபாடு காணுவிடினும் அதன் படலத்தொகை 18, 23, என வேறு வேறு காணப்படுகின்றது.

## 5. கம்பருடைய தந்தை.

சில இராமாயண ஏடுகளில் விடைகொடுத்த படலத்தின்பின் சில அரிய செய்யுட்கள் வரையப்பட்டுள்ளன. அவற்றுள்

ஆதவன் புதல்வன்முத்தி யறிவினை அளிக்குமண்ணல்
போதவன் இராமகாதை புகன்றருள் புனிதன்மண்மேல்
கோதவம் சிறிதுமில்லான் கொண்டல்மா றன்னையொப்பான்
மாதவன் கம்பன் செம்பொன் மலரடி தொழுது வாழ்வாம்.

இம்பரும் உம்பர்தாமும் ஏத்திய விராமகாதை
தம்பமா முத்திசேர்தல் சத்தியம் சத்தியம்மே
அம்பரந்தன்னில் மேவும் ஆதித்தன் புதல்வன்ஞானக்
கம்பன் செங்கமலபாதம் கருத்துற இருத்துவாமே.

என்பவற்றில் 'ஆதித்தன் புதல்வன்' எனவருதலால் கம்பர் தந்தையார்க்கு ஆதித்தன் என்பது பெயராமெனத் தெரிகின்றது. இதுபற்றியே "தராதலத்தினுள்ள" என்னும் பாட்டில் 'ஆதித்தன் கம்பன்' எனவழங்கினர் என்று அறியப்படுகின்றது. இது சங்கரன் புதல்வனை சடையனைச் 'சங்கரன் சடையன்' எனவழங்கியது போல்வது.

ஆவின் கொடைச்சகரர் ஆயிரத்து நூறெழித்துத்
தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு—மூவலூர்ச்
சீரார் குணாதித்தன் சேயமையப் பாடினான்
காரார் காகுத்தன் கதை.

என்றும் வருதலால், இவருடைய தந்தையார் திருவழுந்தூர் நாட்டு மூவலூரில் வசித்தவரெனத் தோன்றுவது; திருவழுந்தூரும் மூவலூரும் மிகவும் சமீபமான ஊர்கள். மதுரையில் செல்லத்தம்மை கோவிற் பூசகர்கள் கம்பர் வழியினரென்று கொண்டு தங்களைச் சூரிய

குலத்தவரெனக் கூறுகின்றனர்: அது இவ்வாதித்தன் என்னும் பெயர் பற்றியாகுமெனத் தோன்றுவது.

## 6. கம்பர் சோழனுடன் கோபித்துக்கொண்டு மதுரைக்குப் போனது.

கம்பர் பாண்டியநாடு போய் மதுரையில் பிரவேசித்தார். பாண்டியன் இவரை உபசரித்து அரண்மனையில் வைத்திருந்தான். சில காலமானபிறகு சோழன் பெரிதும் மனம் நொந்து சடையன் தம்பியாகிய இணையாரமார்பன் என்பானைக் கம்பரைக் கூட்டிக்கொண்டு வருமாறு மதுரைக்குச் செலவிடுத்தனன். அவன்போய்க் கம்பரைக் கண்டு அளவளாவி மகிழ்ந்து தான் வந்த காரண முரைப்ப, கம்பர் இணையாரமார்பனைப் பாண்டியனிடம் அழைத்துச்சென்றார். இருவரையும் வரவேற்ற பாண்டியன் 'நும்முடன் வீற்றிருக்கும் இவன் யார்? என்ன, கம்பர் "இவன் எனக்கும் சரராமனை சடையனுக்கும் தம்பி, இணையாரமார்பன் என்னும் பெயரினன்" என்று கூறினர். இதற்கு மேற்கோள்:—

தீரம்பெரிய தென்னர்பிரான் சிங்காதனத்திற் சேர்த்தி'இவன்
ஆ'ரென்றுரைப்ப 'நம்பி இணையாரமார்பன் அடியேற்கும்
சாரும் சரராமனுக்கு மொருதம்பி' எனக்கம்பன்புகழும்
வாரும் பெருவெண்ணெயர் பெருமான் வளஞ்சேர் சோழமண்டலமே.

## 7. கம்பர் சோழனிடம் இரண்டாமுறை கோபித்துப் பிரதாபருத்திரனிடம் போனது.

கம்பர் வடக்குநோக்கிச் செல்லும்போது வழியில் சிலரைப் பாடிச் சில வரிசைகள்பெற்று ஓரங்கல் நாட்டை அடைந்தார். அருங்கலை விநோதனுன பிரதாபருத்திரனது அவைக்கண் எய்தித் தமது கல்வி மாட்சியால் அவ்வேந்தனையும் அவையையும் தம்வயப்படுத்தி அவ்வரசனால் நன்கு போற்றப்பட்டு இனிது ஒழுகுவாராயினர். சிலகாலம் சழிந்தபிறகு தாம் வந்த காரணத்தை எடுத்தோதி, அவ்வேந்தனுக்குச் சோழன்பால் பெருஞ்சினம் மூளச் செய்து, தமது அளவில் பேராற்றலைச் சோழன் உணருமாறு அவ்வுருத்திரனைத் தமக்கு அடைப்பைகட்டிக்கொண்டு தம்முடன் சோணாடு போத வேண்டினர். அவன் அங்ஙனமே போந்து அவரைச் சோணாட்டே முன்னரினும் சிறக்க வீற்றிருக்க வைத்துத் தன்னூர்க்கு மீண்டனன்.

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1926. B 10726.